Find us on facebook/tamilmirror Follow us on tamilmirror epaper/tamilmirror.lk

தமிழ்Mirror www.tamilmirror.lk

MONDAY, MARCH 13, 2023

திங்கட்கிழமை மார்ச் 13, 2023 | ஒளி: 08 கதிர் 227 | பக்கம்:07 | நகரப்பதிப்பு★ | FREE

உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்துவதற்கு

# நிதி கேட்டு கடிதம்

உள்ளூராட்சி சபைத் தேர்தலை நடத்துவதற்கு தேவையான நிதியை வழங்குமாறு கோரி ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்கவுக்கு கடிதம் அனுப்பியுள்ளதாக தேசிய தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

நிதி அமைச்சர் என்ற வகையில் இது தொடர்பான கடிதம் ஜனாதிபதிக்கு அண்மையில் அனுப்பி வைக்கப்பட்டதாக தேர்தல்கள் ஆணைக்குழு, ஞாயிற்றுக்கிழமை (12) தெரிவித்தது.

தேர்தலுக்கு பணம் வழங்குமாறு நிதி அமைச்சின் செயலாளருக்கு ஆணைக்குழு அனுப்பிய கடிதத்தை, நிதி அமைச்சரின் அனுமதிக்காக அமைச்சின் செயலாளர் அனுப்பி வைத்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

தற்போதைய சூழ்நிலையில் தேர்தலுக்கான பணத்தை விடுவித்துக்கொள்ள தனது அனுமதி போதுமானதாக இல்லை என்று நிதி அமைச்சின் செயலாளர் அறிவித்துள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் சட்டத்தரணி நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார். உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்குத் தேவையான பணத்தை விடுவிப்பதற்கும் நிதியமைச்சர் என்ற வகையில் ஜனாதிபதியின் அங்கிகாரம் தேவையென நிதி அமைச்சின் செயலாளர் தனது கடிதத்தில் தெரிவித்துள்ளார்.

தொடர்ச்சி P2



## எரிபொருள், பஸ் கட்டணங்கள் குறையும் சாத்தியம்



நாட்டில் எரிபொருள் விலை எதிர்வரும் மாதத்தில் குறைக்கப்பட கூடுமென எரிபொருள் கூட்டுத்தாபன நிறுவன வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

ஐக்கிய அமெரிக்க டொலரின் மதிப்பு சரிவின் இலாபத்தை வாடிக்கையாளருக்கு அளிக்கும் வகையில் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## தபால் மூல வாக்களிப்பு மீண்டும் தள்ளிப்போகும்?



மார்ச் 28ஆம் திகதி முதல் 31 வரை நடைபெறவுள்ள தபால் மூல வாக்களிப்புக்கான வாக்குச் சீட்டுகள் தயாராக இருக்காது என்றும் வாக்குச் சீட்டு அச்சிடும் அட்டவணையை பேணுவதற்கு ஏற்கெனவே தாமதமாகிவிட்டது என்றும் அரசாங்க அச்சக அதிகாரி பொறியாளர் கங்கானி லியனகே தெரிவித்தார்.

தேர்தல் ஆவணங்களை அச்சிடுவதற்கு தமது திணைக்களம் 500 மில்லியன் ரூபாயைக் கோரியுள்ள போதும் இதுவரை 40 மில்லியன் ரூபாயைப் பெற்றுள்ளதாகவும் அந்த நிதி அது போதுமானதாக இல்லை என்றும் குறிப்பிட்டார்.

தொடர்ச்சி P2

ஸ்ரீ லங்கா நீதிபதி சங்கமய BAR ASSOCIATION OF SRI LANKA இலங்கைச் சட்டத்தரணிகள் சங்கம்

எம்.பிக்களின் சிறப்புரிமைக் கேள்விகள்

## நீதித்துறையின் சுயாதீனத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது

பிரேமநாத் சி.தொலவத்த மற்றும் ஷெஹான் சேமசிங்க ஆகியோர் பாராளுமன்றத்தில் எழுப்பிய சிறப்புரிமைக் கேள்விகள் நீதித்துறையின் சுயாதீனத்தில் தாக்கத்தை ஏற்படுத்துவதாக இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

இலங்கை சட்டத்தரணிகள் சங்கமானது நீதிமன்ற சுயாதீனத்தன்மைக்காக அர்ப்பணிப்புடன் செயற்படுவதாகவும் ஜனநாயகம் மற்றும் அரசியலமைப்பின் பாதுகாப்பை உறுதிப்படுத்த தேவையான நடவடிக்கைகளை எடுப்பதாகவும் ஊடக அறிக்கை மூலம் உறுதியளித்துள்ளது. நீதிமன்ற சுயாதீனம் என்பது இலங்கை மக்களின் உரிமை எனவும் பிரஜை மற்றும்

தொடர்ச்சி P2

ரயில் கழிவறையில் சிசு மீட்பு

## இளம் தம்பதிக்கு விளக்கமறியல்

கொழும்பு கோட்டையிலிருந்து மட்டக்களப்பு நோக்கி பயணிக்கவிருந்த ரயிலின் கழிவறையில் சிசுவை கைவிட்டுச் சென்ற இளம் தம்பதியினரை எதிர்வரும் 15ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு பண்டாரவளை பதில் நீதவான் கெண்ட் சில்வா, ஞாயிற்றுக்கிழமை (12) உத்தரவிட்டார்.

தொடர்ச்சி P2



சிசு மீட்கப்பட்ட விவகாரம்:

## பிரதான பொலிஸ் பரிசோதகர் குறித்து விசாரணை

### பொலிஸ்மா அதிபர் பணிப்புரை

மீனகயா இரவு நேர ரயிலின் கழிவறையில் சிசுவை விட்டுச் சென்ற பெண் கைதுசெய்யப்பட்ட வழக்கை பண்டாரவளை தலைமையக பிரதான பொலிஸ் பரிசோதகர் கையாண்ட விதம் தொடர்பில் பொலிஸ் மா அதிபரின் பணிப்புரைக்கு அமைய விசாரணைகளை ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

தொடர்ச்சி P2

## ராஜபக்ஷர்களை பாதுகாத்து மக்களை மிதிக்கிறது யானை



மக்கள் வாழ்வை அழிக்கும் ராஜபக்ஷர்களை காக்கும் யானை அரசாங்கம் தான் நாட்டில் தற்போது ஆட்சியிலுள்ளதாக தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச, வரிச்சுமையையும் பொருட்களின் விலையையும் அதிகரித்து பொருளாதாரத்தையும் சீரழித்து மக்களின் வாழ்வையும் நிலைகுலைக்கும் சூழலையே உருவாக்கி வருவதாக தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## 4 மாகாணங்களில் வேலை நிறுத்தம்

மேல், மத்திய, தெற்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் இன்றையதினம் (13) வேலைநிறுத்தப் போராட்டத்தை முன்னெடுக்கவுள்ளதாக அரசாங்க வைத்திய அதிகாரிகள் சங்கம், ஞாயிற்றுக்கிழமை (12) அறிவித்தது.

அனைத்து வைத்தியசாலைகளிலும் அவசர சிகிச்சைகள் தொழிற்சங்க நடவடிக்கை காரணமாக பாதிக்கப்பட மாட்டாது என்று செயலாளர் டாக்டர் ஹரித அலுத்கே உறுதியளித்தார்.

தொடர்ச்சி P2



## ஸ்டாலினின் பிறந்த நாளுக்கு செந்தில் வாழ்த்து

தமிழ்நாட்டுக்கு விஜயம் செய்துள்ள இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் தலைவர் செந்தில் தொண்டமான், தமிழ்நாடு முதலமைச்சர் மு.க ஸ்டாலினை சந்தித்து அவருக்கு தனது பிறந்தநாள் வாழ்த்துக்களை தெரிவித்துக்கொண்டுள்ளார்.

## மஹிந்தானந்தவை மடக்கிய இருவரும் இடைநிறுத்தம்

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் கண்டி மாவட்ட பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் அமைச்சருமான மஹிந்தானந்த அளுத்கமகேவின் வெளிநாட்டு பயணத்துக்கு தடை விதித்த குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்கள அதிகாரிகள் இருவர் பணி இடைநிறுத்தம் செய்யப்பட்டுள்ளனர் என்று திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகம் அறிவித்துள்ளார்.



தனிப்பட்ட விஜயம் ஒன்றுக்காக கடந்த வெள்ளிக்கிழமை இரவு கட்டுநாயக்க பண்டார நாயக்க சர்வதேச விமான நிலையத்தின் ஊடாக நாட்டை விட்டு வெளியேற முயன்ற மஹிந்தானந்த எம்.பி, மத்துகம நீதிமன்றத்தால் வெளிநாட்டு பயணத் தடை விதிக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டு தடுத்து நிறுத்தப்பட்டார்.

தொடர்ச்சி P2

IMF அங்கிகாரம் கிடைத்ததும்

## 8.4 பில்லியன் டொலர்களை எதிர்பார்க்கிறது இலங்கை

எதிர்வரும் 20ஆம் திகதியன்று இலங்கைக்கு உதவி வழங்குவது தொடர்பான வேலைத்திட்டம் சர்வதேச நாணய நிதியத்தின் (ஐஎம்எப்) நிறைவேற்று சபைக்கு சமர்ப்பிக்கப்படவுள்ள நிலையில், தனது வெளிநாட்டு கையிருப்பை 8.4 பில்லியன் டொலர்களாக அதிகரிப்பதற்கு இலங்கை எதிர்பார்ப்பதாக அறியமுடிகிறது.

தொடர்ச்சி P2

மத்திய மாகாண பாடசாலைகளில்

## வினாத்தாள் வெளியானமை குறித்து விசாரணை

மத்திய மாகாணத்தில் உள்ள பாடசாலைகளில் 10 மற்றும் 11 ஆம் வகுப்புகளுக்கான தவணைப் பரீட்சைகள் இடம்பெறுவதற்கு முன்னர், வினாத்தாள்கள் வெளியாகியுள்ளமை தொடர்பில் விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

பௌத்தம், ஆங்கிலம், சிங்களம் ஆகிய பாடங்களுக்கான வினாத்தாள்களே வெளியாகியுள்ளதாக மத்திய மாகாண கல்விப் பணிப்பாளர் அமரசிறி பியதாச குறிப்பிட்டார்.

இது தொடர்பில் குற்றப்புலனாய்வு திணைக்களத்தின் உதவியுடன் விசாரணைகள் ஆரம்பிக்கப்படும் எனவும் அவர் கூறினார்.

## சிறுபோகத்தில் யூரியா விலை மேலும் குறையும்

10 ஆயிரம் ரூபாய்க்கு விற்பனை செய்யப்பட்டு வரும் யூரியா உரத்தின் விலை எதிர்வரும் சிறு போகத்தில் மேலும் குறைக்கப்படும் என்று விவசாய அமைச்சர் மஹிந்த அமரவீர தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## அசிங்கமான வேலை செய்த 2 மாணவர்களுக்கு வலை

தரம் 6இல் கல்விப்பயிலும் மாணவன் ஒருவனை, தரம் 11இல் கல்விப்பயிலும் மாணவர்கள் இருவர், பாலியல் துஷ்பிரயோகம் செய்த குற்றச்சாட்டின் கீழ் தேடப்பட்டுவருகின்றனர்.

பாடசாலைக்குள் வைத்தே இவ்வாறு பலமுறை அந்த மாணவனை இவ்விரு மாணவர்களும் பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளனர்.

தெஹிவளை பிரதேசத்தில் உள்ள பாடசாலை ஒன்றிலேயே இந்த சம்பவம் இடம் பெற்றுள்ளது என்றும் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

இவ்விரு மாணவர்களும் அந்த மாணவனை பல தடவைகள் இவ்வாறு பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளனர் என்பது விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது எனத் தெரிவித்த பொலிஸார், அவ்விரு மாணவர்களையும் கைது செய்வதற்காக வலை வீசப்பட்டுள்ளது என்றனர்.

# புறப்பட்டது சார்லஸ்டன்



அமெரிக்க கடற்படை கப்பலான யுஎஸ்எஸ் சார்லஸ்டன் (எல்சிஎஸ் - 18) திருகோணமலை துறைமுகத்தில் இருந்து ஞாயிற்றுக்கிழமை (12) காலை புறப்பட்டது.

சனிக்கிழமை (11) காலை திருகோணமலை துறைமுகத்தை வந்தடைந்த கப்பலுக்கு கடற்படை மரபுகளுக்கு அமைவாக இலங்கை கடற்படையினரால் வரவேற்பு அளிக்கப்பட்டது.

127.4 மீற்றர் நீளமான சுதந்திர - கிளாஸ் லிட்டோரல் போர்க் கப்பலான யுஎஸ்எஸ் சார்லஸ்டன் (எல்சிஎஸ் - 18) 100 பணியாளர்களைக் கொண்டது.

கப்பலின் கட்டளை தளபதி லாம்சன், ஏ.ஏ. கிழக்கு கடற்படைக் கட்டளைத் தளபதி ரியர் அட்மிரல் தம்மிக்க குமாரவை கிழக்கு கடற்படை கட்டளைத் தலைமையகத்தில் சனிக்கிழமை சந்தித்தார்.

சுமுகமான கலந்துரையாடலின் போது, இருதரப்பு முக்கியத்துவம் வாய்ந்த பல விடயங்கள் குறித்து கருத்துகளை பரிமாறிக் கொண்டனர்.

ஞாயிற்றுக்கிழமை (12) காலை குறித்த கப்பல் புறப்படும்போது, கடற்படை மரபுக்கு அமைய வழக்கமான பிரியாவிடை அளிக்கப்பட்டது.

# இளம் தம்பதிக்கு விளக்கமறியல்

இருவரையும் அன்றைய தினத்தில் கொழும்பு கோட்டை நீதவான் நீதிமன்றில் ஆஜர்படுத்துமாறும் பதில் நீதவான் கட்டளையிட்டார்.
கொஸ்லந்த மீரியபெத்த மற்றும் பண்டாரவளை நாயபெத்த தோட்டத்தில் வசிக்கும் 25 மற்றும் 26 வயதான இருவரும் கொழும்பில் ஒருவரையொருவர் சந்தித்து காதல் வயப்பட்டிருந்ததாகத் தெரிவித்த பொலிஸார், கடந்த மாதம் 25 ஆம் திகதி இவர்களுக்கு பெண் குழந்தை பிறந்ததுள்ளதாக தெரிவித்தனர்.
கடந்த வெள்ளிக்கிழமை (10) பிளாஸ்டிக் கூடையொன்றில் குழந்தையை வைத்து, மீனகயா இரவு ரயிலின் கழிவறையில் கூடையை வைத்துள்ளனர்.
பின்னர், கொழும்பில் இருந்து பண்டாரவளை, கொஸ்லந்த வீடுகளுக்கு சென்ற இருவரும் விசாரணைகளின் பின்னர் கைது செய்யப்பட்டு, பதில் நீவான் முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்ட போதே விளக்கமறியல் உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

## பிரதான பொலிஸ் பரிசோதகர் குறித்து விசாரணை

கொழும்பு கோட்டையிலிருந்து மட்டக்களப்பு நோக்கி பயணிக்கவிருந்த ரயிலின் கழிவறையிலிருந்து சிசு ஒன்று வெள்ளிக்கிழமை (10) மீட்கப்பட்டது.
25 வயதான தாய் பண்டாரவளையிலும் 26 வயதான தந்தை கொஸ்லந்தையிலும் கைது செய்யப்பட்டதாக பொலிஸ் ஊடகப்பேச்சாளர் நிஹால் தல்துவ தெரிவித்திருந்தார்.
இந்நிலையில், பண்டாரவளை பிரதான பொலிஸ் பரிசோதகர் வழக்கை கையாண்ட விதம் குறித்து பொலிஸ் விசேட புலனாய்வுப் பிரிவினால் விசாரணையொன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப்பிரிவு ஞாயிற்றுக்கிழமை (12) விடுத்துள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது.
சந்தேகநபரான குறித்த பெண்ணை கைது செய்த போதும், சந்தேக நபரிடம் விசாரணை நடத்திய போதும், விசாரணையின் விபரங்களை கருத்திற் கொள்ளாமலும் சந்தேக நபரான பெண்ணை அசௌகரியத்திற்கு உள்ளாக்கியதாக பண்டாரவளை தலைமையக பொலிஸ் பரிசோதகருக்கு எதிராக குற்றம் சுமத்தப்பட்டுள்ளது.
குழந்தைகள் மற்றும் பெண்கள் தொடர்பில் எவ்வாறு நடவடிக்கை எடுக்க வேண்டும் என்பது தொடர்பில் பொலிஸ்மா அதிபரினால் வெளியிடப்பட்ட சுற்றறிக்கையை பின்பற்றாத காரணத்தினால் விசாரணை ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக குறிப்பிடப்பட்டுள்ளது.

# நிதி கேட்டு கடிதம்

நிதி ஒதுக்கப்படாமையால், 2023 மார்ச் மாதம் 9 ஆம் திகதி நடைபெறவிருந்த உள்ளூராட்சி தேர்தலை ஒத்திவைக்க வேண்டிய நிலை ஏற்பட்டது. இந்நிலையில், அந்தத் தேர்தலை நடத்துவதற்கு ஏப்ரல் 25ம் ஆம் திகதி நாள் குறிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.
2023ஆம் ஆண்டுக்கான வரவு -செலவுத் திட்டத்தில் உள்ளூராட்சி மன்ற தேர்தலுக்காக ஒதுக்கப்பட்ட நிதி தடுத்து நிறுத்தப்பட மாட்டாது என நிதியமைச்சர் சார்பில் நிதியமைச்சின் செயலாளருக்கும், சட்டமா அதிபருக்கும் உயர் நீதிமன்றம் இடைக்கால உத்தரவு பிறப்பித்த போது தீர்மானிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

## நீதித்துறையின் சுயாதீனத்தில் தாக்கத்தை ஏற்படுத்துகிறது

அரசுக்கு இடையிலான மற்றும் பிரஜைகளுக்கு இடையிலான நீதியை உறுதிப்படுத்துவதற்கு சுதந்திரமான நீதித்துறை அவசியம் என்பதை அனைத்து அரச நிறுவனங்களும் ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் வலியுறுத்தியுள்ளது.
திறைசேரி செயலாளர் மீதான உயர் நீதிமன்றத்தின் இடைக்கால உத்தரவு தொடர்பாக ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் எம்.பி பிரேமநாத் சி.தொலவத்த சிறப்புரிமை கேள்வி எழுப்பினார்.
இது சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தனவினால் பாராளுமன்றத்தின் நெறிமுறைகள் மற்றும் சிறப்புரிமைகள் தொடர்பான குழுவிற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளது.
இந்த விவகாரம் குறித்தே இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் ஊடக அறிக்கை வெளியிட்டுள்ளதுடன், இவ்விடயம் குறித்து எதிர்க்கட்சிகளும் அச்சம் தெரிவித்துள்ளன.

## 8.4 பில்லியன் டொலர்களை எதிர்பார்க்கிறது இலங்கை

சர்வதேச நாணய நிதியத்திடம் இருந்து 2.9 பில்லியன் டொலர்களையும் நிதியத்தின் அங்கிகாரம் கிடைத்தவுடன் சுமார் 2.5 பில்லியன் அமெரிக்க டொலர்களை உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியிடமிருந்து இலங்கை எதிர்பார்ப்பதாக நிதியமைச்சு வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.
அத்துடன், தெரிவு செய்யப்பட்ட அரசுக்கு சொந்தமான நிறுவனங்களின் மறுசீரமைப்பு மூலம் 3 பில்லியன் டொலர்களை பெறுவதற்கும் அராங்கம் எதிர்பார்த்துள்ளது.
2022ஆம் ஆண்டு செப்டம்பரில் பணியாளர் மட்ட உடன்படிக்கை எட்டப்பட்டபோது கொடுக்கப்பட்ட 15 பணிகளை இலங்கை அரசாங்கம் பூர்த்தி செய்துள்ளது.
மேலும், அனைத்து கடன் வழங்குநர்களும் சர்வதேச நாணய நிதியம் தடையை நீக்குவதற்கு தேவையான கடன் உத்தரவாதங்களை வழங்கியுள்ளனர் என்பதை நிதி அமைச்சு உறுதிப்படுத்தியுள்ளது.
சர்வதேச நாணய நிதியத்தினால் கடன் வழங்குவதற்கு அனுமதியளிக்கப்பட்ட பின்னர் ஏனைய தரப்பினரும் இலங்கைக்கு கடன் வழங்குவதற்கு சந்தர்ப்பம் ஏற்பட்டுள்ளதாக சர்வதேச நாணய நிதியம் தெரிவித்துள்ளது.
இந்தப் பின்னணியில், உலக வங்கியின் 1.5 பில்லியன் அமெரிக்க டொலர் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியின் 1 பில்லியன் அமெரிக்க டொலர் நிதியுதவி, அரச நிறுவனங்களின் மறுசீரமைப்பு மூலம் 3 பில்லியன் டொலர் மூலம் இலங்கையின் கையிருப்புகளை அதிகரிக்க நிதி அமைச்சு எதிர்பார்த்துள்ளது.
கடந்த மூன்று வருடங்களில் இலங்கையின் வெளிநாட்டு கையிருப்பு வீழ்ச்சியடைந்ததுடன், எரிபொருள் உள்ளிட்ட அத்தியாவசியப் பொருட்களை கடந்த வருடம் பெறுவதற்கு அரசாங்கம் போராடியது.
எனினும், இலங்கை மத்திய வங்கியின் தகவலுக்கு அமைய, புதிய அரங்சாங்கத்தின் கீழ், இலங்கையின் பொருளாதாரம் படிப்படியாக மீண்டு வருவதோடு, வெளிநாட்டு கையிருப்புகளும் படிப்படியாக அதிகரித்து வருகின்றமை குறிப்பிடத்தக்கது.

## எரிபொருள், பஸ் கட்டணங்கள் குறையும் சாத்தியம்

### IMF இல் கடன் பெற்ற பின் பொருளாதாரம் வழமைக்குத் திரும்பும்

ஐக்கிய அமெரிக்க டொலரின் மதிப்புக் குறைப்பு மட்டுமின்றி, சிங்கப்பூர் சந்தையில் எரிபொருள் விலை வீழ்ச்சியும் எரிபொருள் விலை குறைவதற்கு முக்கிய காரணமாக உள்ளதென தெரிவிக்கப்படுகின்றது.
எரிபொருள் விலை ஏப்ரல் முதல் வாரத்தில் குறைக்கப்படும் என்றும், எவ்வளவு ரூபாயால் குறைப்பது என்பது குறித்து இதுவரை முடிவு எடுக்கப்படவில்லை என்றும் அந்தத் தகவல்கள் தெரிவிக்கின்றன.
இந்நிலையில், ஐக்கிய அமெரிக்க டொலருக்கு நிகராக உயரும் இலங்கை ரூபாயின் பெறுமதி தொடர்ந்தும் நிலையானதாக இருந்தால் ஜூன் மாதமளவில் பஸ் கட்டணங்கள் மீள் திருத்தப்பட்டு குறைக்கப்படலாம் என்று இலங்கை தனியார் பஸ் உரிமையாளர்கள் சங்கத்தின் தலைவர் கெமுனு விஜேரட்ன தெரிவித்துள்ளார்.
ஒவ்வொரு வருடமும் ஜூலை முதலாம் திகதி முதல் நடைமுறைக்கு வரும் வருடாந்த பஸ் கட்டண திருத்தத்துடன் தற்போதைய கட்டணம் பரிசீலிக்கப்படும் என்றும் அவர் தெரிவித்தார்.
தற்போது இலங்கை ரூபாயின் பெறுமதி டொலருக்கு நிகராக உயர்வடையும் நிலையைத் தொடர்ந்து இலங்கையின் பொருளாதாரம் வழமைக்குத் திரும்பும் என தாம் நம்புவதாகவும் சர்வதேச நாணய நிதியத்தின் ( IMF) வின் கடன் தொகையைப் பெற்ற பின் இலங்கையின் பொருளாதாரம் வழமைக்குத் திரும்பும் எனவும் அவர் குறிப்பிட்டார்.

## 4 மாகாணங்களில் வேலை நிறுத்தம்

மகப்பேறு மற்றும் சிறுவர் வைத்தியசாலைகள், தேசிய புற்றுநோய் நிறுவனம், தேசிய மனநல நிறுவனம், சிறுநீரக சிகிச்சை பிரிவுகள், இராணுவ வைத்தியசாலைகள் ஆகியவற்றின் நடவடிக்கைகளும் பாதிக்கப்படாது என்றும் அவர் அறிவித்தார்.

# ராஜபக்ஷர்களை பாதுகாத்து மக்களை மிதிக்கிறது யானை

கொட்டாஞ்சேனை பிரதேசத்தில் அண்மையில் இடம்பெற்ற வட்டார மட்ட மக்கள் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றும் போது எதிர்க்கட்சித் தலைவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
மக்களை மரணப் படுக்கைக்கு இட்டுச் சென்று நாட்டை கட்டியெழுப்பும் கொள்கையை நடைமுறைப்படுத்தும் இந்த அரசாங்கம் திருடர்களைப் பிடிப்பதாக இல்லை என்றும் அரசாங்கம் திருடர்களுடன் டீல் போட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.
ஐ.ம.ச. என்பது திருடர்களுடன் டீல்போடும் கட்சியல்ல எனவும், மக்களுடன் மட்டுமே டீல் போடும் அரசியல் கட்சியாகும் எனவும் அவர் தெரிவித்தார்.
ஜனாதிபதி கூறுவது போல் போராட்டங்கள் தடைசெய்யப்பட்டுள்ளதாகவும், பேச்சு சுதந்திரம் உள்ளிட்டமக்களின் கருத்து சுதந்திரத்தை தடை செய்யும் ஜனாதிபதி, தடியடி கண்ணீர் புகை பிரயோகங்களால் மட்டுமே பதில் வழங்குவார் எனவும் சுட்டிக்காட்டினார்.
இந்த கோழைத்தனமான அரசாங்கத்துக்கு எதிராக மௌனமாக இருப்பதா அல்லது உள்ளூராட்சி மன்றத் தேர்தலுக்குப் பின்னர் வீதியில் இறங்கி இந்த முட்டாள்தனமான அரசாங்கத்தை விரட்டியடிக்க ஒன்றிணைவதா என்று மனவேதனையுடன் இருக்கும் மக்களிடம் கேட்பதாகவும் எதிர்க்கட்சித் தலைவர் தெரிவித்தார்.

# மஹிந்தானந்தவை மடக்கிய இருவரும் இடைநிறுத்தம்

மத்துகம நீதிமன்றத்தில் தமக்கு எதிராக வழக்கு தொடரப்படவில்லை என்றும் பயணத்தடை விதிக்கப்படவில்லை என்றும் அதிகாரிகளுக்கு அறிவித்த எம்.பி, தனது பயணத்தை இரத்துச் செய்திருந்தார்.
கொழும்பு மேல் நீதிமன்றத்தினால் எம்.பிக்கு எதிராக வெளிநாட்டு பயணத்தடை விதிக்கப்பட்டிருந்த நிலையில், அவரின் கோரிக்கைக்கு அமைய தடை நீக்கப்பட்டிருந்தது.
இதுகுறித்து, குடிவரவு மற்றும் குடியகல்வு கட்டுப்பாட்டாளருக்கு மஹிந்தானந்த எம்.பியினால் அறிவிக்கப்பட்ட நிலையில், கணினி தரவு அமைப்பில் ஏற்பட்ட பிழையினால் இந்த நிலை ஏற்பட்டதாகவும் பிழையை நிவர்த்தி செய்ததன் பின்னர் வெளிநாட்டுப் பயணத்துக்கான அனுமதி வழங்கப்படும் என்றும் கட்டுப்பாட்டாளர் அறிவித்துள்ளார்.
சம்பவம் தொடர்பில் இன்று (13) விசாரணை இடம்பெறவுள்ளதுடன், அந்த நேரத்தில் கடமையில் இருந்த குடிவரவு மற்றும் குடியகல்வு அதிகாரிகள் இருவர் பணி இடைநீக்கம் செய்யப்பட்டுள்ளதாகவும் கட்டுப்பாட்டாளர் நாயகம் அறிவித்தார்.

# சிறுபோகத்தில் யூரியா விலை மேலும் குறையும்

அதற்கமைய ஒரு மூடை யூரியா உரத்தின் விலை 7,500 ரூபாய் முதல் 9 ஆயிரம் ரூபாயாக குறைக்கப்பட்டு விற்பனை செய்யப்படும் என்றார்.
அகுனகொலபலஸ்ஸ பிரதேசத்தில் உள்ள விவசாயிகளுக்கு சீன அரசாங்கத்தினால் வழங்கப்பட்ட எரிபொருளை விநியோகிக்கும் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.
மேலும், ஒரு ஹெக்டேருக்கு 10 ஆயிரம் ரூபாய் வீதம் விவசாயிகளின் வங்கிக் கணக்குகளில் 650 கோடி ரூபாய் வரவு வைக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.
உடனடியாக பணம் கிடைக்காத விவசாயிகளுக்கு மேலும் 150 கோடி ரூபாய் வழங்கப்பட்டுள்ளதாக அமைச்சர் கூறினார்.
விவசாயிகளின் உற்பத்திச் செலவைக் குறைப்பதற்கும் விவசாயிகளையும் நுகர்வோரையும் பாதுகாப்பதற்காகவும் இந்தச் சலுகைகள் அனைத்தும் விவசாயிகளுக்கு அரசாங்கத்தால் வழங்கப்பட்டதாக அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

# தபால் மூல வாக்களிப்பு மீண்டும் தள்ளிப்போகும்?

## புதிய திகதிகள் குறித்து ஆணைக்குழு கூடி தீர்மானிக்க வேண்டும்

தேர்தல்கள் ஆணைக்குழுவும் தேர்தல் நிதிக்காக திறைசேரியிடம் இருந்து சாதகமான பதிலை எதிர்பார்க்கும் நிலையில் இந்த விடயம் வெளியாகியுள்ளது.
எதிர்வரும் புதன்கிழமைக்குள் தேர்தலுக்காக 500 மில்லியன் ரூபாயும் மாத இறுதிக்குள் மேலும் 600 மில்லியன் ரூபாயும் எதிர்பார்க்கப்படுவதாக தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் நிமல் புஞ்சிஹேவா தெரிவித்தார்.
அடுத்த வாரத்தின் நடுப்பகுதிக்குள் நிதி கிடைக்காவிட்டால், தபால் மூல வாக்களிப்புக்கான புதிய திகதிகள் குறித்து ஆணைக்குழு கூடி தீர்மானிக்க வேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

## தடையை மீறி பத்மநாபாவுக்கு சிலை

■ க. அகரன்

வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் தடையையும் மீறி, வவுனியா மணிக்கூட்டு கோபுர சந்திக்கு அருகாமையில் ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் தலைவர் பத்மநாபாவுக்கு சிலை அமைக்கும் செயற்பாடு துரிதகதியில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.
வீதி அபிவிருத்தி அதிகாரசபைக்கு சொந்தமான இடத்தில் தந்தை செல்வாவின் சிலைக்கு அருகாமையில் குறித்த சிலை அமைக்கும் செயற்பாடு நகரசபையின் அனுமதியுடன் முன்னெடுக்கப்பட்டது.
இந்நிலையில் தமது திணைக்களத்துக்கு சொந்தமான இடத்தில் உரிய அனுமதிகளை பெற்றுக்கொள்ளாமல் குறித்த நிர்மாணம் அமைக்கப்பட்டுவருவதால் அதனை உடனடியாக இடைநிறுத்தி உரிய நடைமுறைகளை பின்பற்றுமாறு வவுனியா மாவட்ட வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் நிறைவேற்று பொறியியலாளரால் வவுனியா நகரசபைக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்தப்பட்டது.
குறித்த கடிதத்தின் பிரதிகள் வவுனியா பிரதி உள்ளூராட்சி உதவி ஆணையாளர் மற்றும் வவுனியா பொலிஸ்நிலையம் உட்பட சில திணைக்களங்களுக்கும் அனுப்பிவைக்கப்பட்டன.
இதனையடுத்து சில நாட்களாக சிலை அமைக்கும் பணிகள் இடைநிறுத்தப்பட்ட நிலையில் இன்றையதினம் குறித்த செயற்பாடு துரிதகதியில் இடம்பெற்றுவருகின்றது.

## ஜனநாயகத்தை நிலைநாட்ட வேண்டும்

■ எஸ்.சதீஸ்.

பெண்களின் பிரச்சினைகள் தீர்க்கப்பட வேண்டுமானால் நாட்டின் ஜனநாயகத்தை நிலைநாட்ட வேண்டுமென பாராளுமன்ற உறுப்பினரான வே.இராதாகிருஸ்ணன் தெரிவித்தார்.
மஸ்கெலியா லிது மண்டபத்தில் ஞாயிற்றுக்கிழமை (12) இடம்பெற்ற சர்வதேச மகளிர் தின விழாவில் கலந்து கொண்டு உறையாற்றும் போதே அவர் இதனை தெரிவித்தார்.
“ மலையக பெருந்தோட்ட பெண்கள் ஒரு நாளைக்கு 22 கிலோ தேயிலை கொழுந்து பறிக்க வேண்டியுள்ளது.
ஆகையால் தான் தோட்ட நிர்வாகம் பெருந்தோட்ட பெண் தொழிலாளர்களுக்கு நெருக்கடி கொடுத்து வருகிறனர். புதிய தமிழ் கூட்டணி ஒன்றை அமைப்பதற்கான முயற்சி தற்பொழுது இடம்பெற்று கொண்டிருக்கிறது என்றார்.

### அம்பாறை சிறுபோக நெற்செய்கையாளர்களுக்கு

# இலவச டீசல் விநியோகம்

## சீன அரசாங்கம் உதவியது

■ எம்.எஸ்.எம். ஹனீபா

சீன அரசாங்கத்தால் விவசாயிகளுக்கு இலவசமாக விநியோகிப்பதற்கு வழங்கப்பட்ட டீசல், அம்பாறை மாவட்டத்தில் சிறுபோக நெற்செய்கையில் ஈடுபடவுள்ள விவசாயிகளுக்கு விநியோகிக்கப்பட்டு வருவதாக, அம்பாறை மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் வீ. ஜெகதீசன், நேற்று (12) தெரிவித்தார்.

இதன்படி, அம்பாறை மாவட்டத்திலுள்ள கமநல சேவை மத்திய நிலையங்களின் ஊடாக தெரிவுசெய்யப்பட்டுள்ள விவசாயிகளுக்கு இலவசமாக டீசல் விநியோகிக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்தார்.



இரண்டு அரை ஏக்கருக்கு உட்பட்ட நெற்செய்கை காணிகளுக்கு ஒரு ஏக்கருக்கு 06 லீட்டர் டீசல் விநியோகிக்கப்பட்டு வருவதாக தெரிவித்தார்.

எரிபொருளுக்கான பங்கீட்டு அட்டைக்கான எரிபொருளை அதற்கென தெரிவு செய்யப்பட்டுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களில் பெற்றுக் கொள்ளலாமென அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை, அம்பாறை மாவட்டத்தில் சிறுபோக வேளாண்மை செய்கை மேற்கொள்வதற்கு முன்னுரிமை அடிப்படையில் உழவு இயந்திரங்களுக்கான எரிபொருள் விநியோகிக்கப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகின்றது.

எரிபொருள் விநியோகம் மட்டுப்படுத்தப்பட்டுள்ள போதிலும் விவசாயிகளுக்கு எவ்விதப் பாதிப்பும் ஏற்படாத வகையில், எரிபொருளை வழங்குவதற்கு நடவடிக்கை எடுத்துள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

### பகடிவதை உயிர்மாய்க்க முயன்ற

# யாழ். மாணவன் மீட்கப்பட்டார்

■ எம்.றொசாந்த்




யாழ்ப்பாணத்தில் காணாமற் போனதாக தெரிவிக்கப்பட்ட மொறட்டுவ பல்கலைக்கழக மாணவன் பகடிவதைக்கு உள்ளாகி, மனம் நொந்த நிலையியே வீட்டை விட்டு வெளியேறி, உயிரை மாய்க்க முயன்றுள்ளார் என விசாரணைகளில் கண்டறியப்பட்டுள்ளது.

கோப்பாய் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியைச் சேர்ந்த மொறட்டுவ பல்கலைக்கழகத்தின் முதலாம் ஆண்டு மாணவன் கடந்த சில தினங்களுக்கு முன்னர் வீட்டிலிருந்து காணாமல் போனதாக கோப்பாய் பொலிஸ் நிலையத்தில் வீட்டாரால் முறைப்பாடு செய்யப்பட்டிருந்தது.

முறைப்பாட்டின் பிரகாரம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இந்நிலையில், தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட பகுதியில் உள்ள பாழடைந்த வீடொன்றில் இளைஞன் ஒருவர் தங்கி இருப்பதாக பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் அங்கு விரைந்த பொலிஸார், இளைஞரை கைது செய்து விசாரணைகளை முன்னெடுத்தனர்.

அதன்போது கோப்பாய் பொலிஸ் பிரிவுக்குள் காணாமல் போன பல்கலைக்கழக மாணவன் என கண்டறிந்தனர்.

அதைத் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்ட விசாரணையில், பல்கலைக்கழகத்தில் தான் கடுமையாக பகடிவதைக்கு உட்படுத்தப்பட்டேன் எனவும் , தினமும் மாலை 06 மணி முதல் இரவு 10 மணி வரையில் சிரேஷ்ட மாணவர்களுடன் தொலைபேசியில் உரையாட கட்டாயப்படுத்தப்பட்டதாகவும் , "சிரேஷ்ட மாணவர்களுக்கு மரியாதை கொடுப்பேன்" என ஆயிரம் தடவைகள் எழுத பணிக்கப்பட்டதாகவும் அந்த சித்திரவதைகள் தாங்காது , பல்கலைக்கழகத்தில் இருந்து வீடு திரும்பியதாக மாணவன் கூறியுள்ளான்.

மாணவனின் கைகள் மற்றும் கழுத்துப் பகுதிகளில் வெட்டு காயங்களும் காணப்படுகின்றன. தனது உயிரை மாய்க்க முயன்று இருக்கலாம் என பொலிஸார் சந்தேகித்துள்ள நிலையில், மாணவனை சட்ட வைத்திய அதிகாரி முன் மருத்துவ பரிசோதனைக்காக முற்படுத்த நடவடிக்கை எடுத்துள்ளனர்.

### உழவு இயந்திரம் புரண்டது

## சாரதி ஸ்தலத்தில் உயிரிழப்பு

■ க.விஜயரெத்தினம், கனகராசா சரவணன்



மட்டக்களப்பு - ஆயித்தியமலை வயல் பகுதியில் உழவு இயந்திரத்தால் உழுது கொண்டிருந்த போது , உழவு இயந்திரம் தலைகீழாக பிரண்டதில் அதனைச் செலுத்திய சாரதி உயிரிழந்த சம்பவம், நேற்று முன்தினம் (11) பிற்பகல் இடம்பெற்றுள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

ஆயித்தியமலை நெல்லூரைச் சேர்ந்த 34 வயதுடைய தர்மதாசா சதீஸ்வரன் என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

உழும் நடவடிக்கையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த போது, உழவு இயந்திரத்தின் பின்பக்க டயர்கள் வயலில் புதைந்ததையடுத்து, உழவு இயந்திர முன்பகுதி மேல் எழுந்து தலைகீழக புரண்டுடதையடுத்து, அவர் கீழ் விழுந்ததில் கலப்பையில் தலை அடிபட்டு படுகாயமடைந்ததையடுத்து, சம்பவ இடத்திலே உயிரிழந்துள்ளார்.

இதனையடுத்து அவரை பொலிஸார் மீட்டு, பிரேத பரிசோதனைக்காக மட்டு. போதனா வைத்தியசாலையில் ஒப்படைத்துள்ளனர்.

இது தொடர்பான மேலதிக விசாரணைகளை ஆயித்தியமலை பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## பதிவாளருக்கு பிரியாவிடை

■ நூருல் ஹுதா உமர், எம்.எஸ்.எம் நூர்தீன்

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகத்தின் பதிவாளர் எச்.அப்துல் சத்தார் ஓய்வுபெற்றுச் செல்லவுள்ள நிலையில், அப்பல்கலைகழகத்தின் சுதந்திர ஊழியர் சங்கம் ஏற்பாடு செய்திருந்த பிரியாவிடை நிகழ்வு, தொழிலாளர் மேம்பாட்டு நிலையக் கேட்போர் கூடத்தில் சங்கத்தின் தலைவர் முனாஸ் முகைடீன் தலைமையில் நடைபெற்றது.

இந்நிகழ்வுக்கு பிரதம அதிதியாகப் பல்கலைக்கழக உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூவக்கர் கலந்துகொண்டு உரையாற்றினார்.

அதேவேளை கௌரவ அதிதியாக துணைப் பதிவாளர் ஐ.எல்.தஸ்லிம், விசேட அதிதியாக பதில் நிதியாளர் சி.எம். வன்னியாராச்சி ஆகியோரும் கலந்துகொண்டிருந்தனர்.

சுதந்திர ஊழியர் சங்கத்தின் தலைவர் முனாஸ் முகைடீன் உள்ளிட்ட உயர் சபை உறுப்பினர்களால் மாலையிட்டு வரவேற்கப்பட்ட பதிவாளர் சத்தார், இப் பல்கலைக்கழகத்துக்கு ஆற்றிய உயர் பணிகள் தொடர்பில் சிலாகித்துப் பேசிய நிகழ்வின் தலைவர் மற்றும் பிரதம அதிதி உள்ளிட்ட அதிதிகள் அவர் ஆற்றிய பணிக்காக நன்றி தெரிவித்தனர்.

சுதந்திர ஊழியர் சங்கத்தின் உயர்சபை உறுப்பினர்களால் பொன்னாடை போர்த்தி, ஞாபகப்பொருள் மற்றும் சின்னம் வழங்கியும் கௌரவிக்கப்பட்டார்.



### காத்தான்குடியில் பாரியளவில்

## கரவலை மீன்கள் சிக்கின

■ எம்.எஸ்.எம்.நூர்தீன்

காத்தான்குடி கடலில் பெருமளவிலான கரவலை எனப்படும் சிறிய மீன்கள், நேற்று (12) பிடிக்கப்பட்டுள்ளதாக மீனவர்கள் தெரிவித்தனர்.

கரவலை எனப்படும் இந்தச் சிறிய மீன்கள் சுமார் 200 கிலோகிராம் அளவில் பிடிபட்டுள்ளதாகவும் மீனவர்கள் தெரிவித்தனர்.



இந்த மீன்கள், சந்தையில் விற்பனை செய்வதற்காக மொத்த மீன் வியாபாரிகளுக்கு விற்பனை செய்ததாகவும் மீனவர்கள் தெரிவித்தனர்.

### சுற்றாடல் அமைச்சர்

## கோப் 28 மாநாடு குறித்து கவனம்

■ எம்.எஸ்.எம் நூர்தீன்



இலங்கைக்கான ஐக்கிய அரபு இராச்சியத் தூதுவர் மற்றும் எகிப்து தூதுவர் ஆகியோர், சுற்றாடல் அமைச்சர் நஸீர் அஹமடைச் சந்தித்துக் கலந்துரையாடினர்.

கோப் 28 மாநாட்டுக்கான ஏற்பாடுகள் குறித்து இச்சந்திப்பில் கவனம் செலுத்தப்பட்டது. இம்மாநாடு, இவ்வருடம் (2023) ஐக்கிய அரபு இராச்சியத்தில் நடைபெறவுள்ளது.

எகிப்தில், 2022 இல் நடந்த கோப் 27 மாநாட்டில், இலங்கை முன்வைத்த முன்மொழிவுகள் பற்றி கோப் 28 மாநாட்டிலும் கவனம் செலுத்தப்படும்.

தற்போது கோப் 27 மாநாட்டின் தலைமைப் பதவி எகிப்திடம் உள்ள நிலையில், புதிய தலைமைத்துவத்தை ஐக்கிய அரபு இராச்சியம் பொறுப்பேற்கவுள்ளமை குறிப்பிடத்தக்கது.



## அரசாங்கத்துக்கு எதிராக ஆர்ப்பாட்டம்

■ ஒலுமுதீன் கியாஸ் ஷாபி

தேசிய மக்கள் சக்தியினரால் ஏற்பாடு செய்யப்பட்ட ஆர்ப்பாட்டம் ஒன்று, கிண்ணியா பஸ் நிலையத்துக்கு முன்பாக நேற்று முன்தினம் (11) முன்னெடுக்கப்பட்டது.

மின்சாரம், நீர், சமையல் எரிவாயு மற்றும் உணவுகளின் விலைகளை அதிகரித்து மக்களை வதைக்கும் அரசாங்கத்தை விரட்டி அடிக்கவும் தேர்தல் மூலம் அரசாங்கத்தை மாற்றி அமைக்கவுமே குறித்த போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.


குறித்த போராட்டத்தில் தேசிய மக்கள் சக்தியின் திருகோணமலை மாவட்ட அமைப்பாளர் அருண் ஹேமச்சந்திர உட்பட தேசிய மக்கள் சக்தியின் உறுப்பினர்கள் பலரும் கலந்துகொண்டனர்.















### ஆனையிறவில் 27 அடி உயரமான

## நடராஜர் சிலை பிரதீட்சை

■ சுப்பிரமணியம் பாஸ்கரன்

கிளிநொச்சி - கரைச்சி பிரதேச சபை தீர்மானத்துக்கு அமைவாக, நடராஜர் பணி குழுவினால் ஆனையிறவு பகுதியில் நிர்மாணிக்கப்பட்ட 27 அடி உயரமான நடராஜர் சிலை, நேற்றுக் (12) காலை பிரதீட்சை செய்யப்பட்டது.

கரைச்சி பிரதேச சபையின் கீழுள்ள ஆனையிறவு பகுதியில் பிரதான வர்த்தக மையம், பாரம்பரிய உணவகம், எரிபொருள் நிலையம், நவீனகுளியலறை, விளையாட்டு முற்றம், கடற்கரை உல்லாச விடுதி, உணவகம் மற்றும் வங்கி வசதிகள் என்பவற்றுடன் கூடிய ஆனையிறவு வணிக சுற்றுலா மையத்தை நிறுவும் மூல திட்டமிடல் வரைபடத்தின் அடிப்படையில் முதலாம் கட்ட பணிகள் நிறைவு பெற்றுள்ளன.

அங்கு நிறுவப் பெற்ற சுமார் 27 அடி உயரமான நடராஜர் சிலையே நேற்றுக் காலை 9:30 மணிக்கு பிரதீட்சை செய்து வைக்கப்பட்டது.

குறித்த நிகழ்வில் இந்து மத சிவாச்சாரியார்கள், பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறிதரன், முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் மா.வை. சேனாதி ராஜா மற்றும் பக்தர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

### இறைச்சிக்காக

## மாடுகள் திருட்டு ;மூவர் கைது

■ செந்தூரன் பிரதீபன், எம்.றொசாந்த்

இறைச்சிக்காக பசு மாடுகளை திருட்டுத்தனமாக எடுத்துச் சென்ற மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என பலாலி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி டி.எல்.ஏ நயனஜித் தெரிவித்தார்.

வளலாய் விமான நிலைய வீதியில் நேற்று முன்தினம் (11) இரவு 07 மணியளவில் பலாலி பொலிஸார் ரோந்துக் கடமையில் ஈடுபட்டிருந்த போது மருதடி சந்தி பகுதியில் வைத்து வாகனம் ஒன்றை வழிமறித்து சோதனையிட்டனர்.

இதன்போது, குறித்த சிறிய வாகனத்தில் 05 மாடுகளை மிகவும் சித்திரவதை செய்து, இறைச்சிக்காக திருட்டுத்தனமாக எடுத்து சென்றமை தெரியவந்தது.

இதனையடுத்து கைதுசெய்யப்பட்ட மூவரில் இருவர் கொழும்பு - 14 ஐ சேர்ந்தவர்கள் எனவும் மற்றையவர் அச்சுவேலி, தோப்பு பகுதியைச் சேர்ந்தவர் எனவும் பொலிஸார் தெரிவித்தனர்.




மாடுகள் மிகவும் சித்திரவதை செய்யப்பட்டமையால் ஒன்று பரிதாபமாக உயிரிழந்துள்ளதாகவும் பலாலி பொலிஸார் தெரிவித்தனர்.

அண்மைக் காலமாக வலிகாமம் பகுதிகளில் மாடுகள் திருடப்படும் சம்பவம் அதிகரித்துச் செல்கின்றமையால், பலாலி பொலிஸார் இரவு நேர ரோந்து கடமையை அதிகரித்துள்ளனர்.

## கால்நடைகளை கவனியுங்கள்!

### யாழ். மக்களுக்கு அறிவுறுத்தல்



■ செந்தூரன் பிரதீபன்

யாழ்.மாவட்டத்தில் அண்மைக் காலமாக மாடுகள் திருடப்படும் சம்பவம் அதிகரித்துக் கொண்டு செல்கின்றது.

மாடுகள் தொடர்பில் உரிமையாளர்கள் அவதானமாக இருக்குமாறு பலதடவைகள் வலியுறுத்தியும் பொதுமக்கள் அசட்டயீனமாக நடந்து கொள்வதாக பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

வீதிகளிலும் , வீட்டுக்கு முன்னால் உள்ள மின்கம்பங்களிலும், கால்நடைகளை கட்டி வளர்ப்பதுடன் வீட்டின் வெளிக்கவினையும் ஒழுங்கான முறையில் பூட்டாததன் காரணமாக இவ்வாறு கால்நடைகள் திருடப்படும் சம்பவங்கள் இடம்பெறுகின்றன.

கால்நடை வளர்ப்பாளர்களின் அவதான குறைபாடே இவ்வாறு கால்நடைகள் திருடப்படுவதற்கு காரணமாக அமைவதுடன் பல லட்சம் ரூபாய் பெறுமதியான கால்நடைகள் இவ்வாறு இறைச்சி வியாபாரிகளினால் திருடப்பட்டு செல்கின்றது.

தமது வாழ்வாதாரத்துக்கு உறுதுணையாக இருக்கும் கால்நடைகளை ஒழுங்கான முறையில் பராமரித்து வளர்ப்பதன் மூலம் இவ்வாறு திருட்டுக்களைக் கட்டுப்படுத்த முடியும் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

**" பல லட்சம் ரூபாய் பெறுமதியான கால்நடைகள் இவ்வாறு இறைச்சி வியாபாரிகளினால் திருடப்படும் செல்கின்றது. அண்மைக்காலமாக கோப்பாய், அச்சுவேலி கரவெட்டி, நீர்வேலி, கோப்பாய் பகுதிகளில் கால்நடைகள் திருட்டு சம்பவம் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது.**

அண்மைக்காலமாக கோப்பாய், அச்சுவேலி கரவெட்டி, நீர்வேலி, கோப்பாய் பகுதிகளில் கால்நடைகள் திருட்டு சம்பவம் அதிகரித்துக் கொண்டே செல்கின்றது.

இந்தத் திருட்டு சம்பவத்துக்குப் பயன்படுத்தப்படும் இரண்டு வாகனங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன.

அந்த நபர்களை கைது செய்வதற்கான மேலதிக விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாக யாழ். மாவட்ட மூத்த பொலிஸார் அதிகாரி ஒருவர் தெரிவித்தார்.

# தங்கத்தைக் கொடுத்த தங்க மனசுக்காரர்

காமினி பண்டார இலங்கதிலக்க

ஓட்டோவொன்றை வாடகைக்கு அமர்த்திச் சென்ற பயணியொருவர் தவறவிட்ட பணம் மற்றும் தங்க கைச்சங்கில் ஆகியவற்றை, ,உரியவரிடமே அந்த ஓட்டோ சாரதி கையளித்துள்ள சம்பவமொன்று மஸ்கெலியா பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

மஸ்கெலியா நகரில் இருந்து, மொக்கா தோட்டத்துக்கு மார்ச் 10ஆம் திகதியன்று வாடகைக்கு ஓட்டோவை செலுத்திச் சென்ற சாரதி, மீண்டும் திரும்பிக்கொண்டிருந்த போது ஓட்டோவில் இருந்து தங்க கை சங்கிலி, 540 ரூபாய் பணம், தேசிய அடையாள அட்டை ஆகியவற்றை கண்டெடுத்துள்ளார்.

அவை மொக்கா தோட்டத்தைச் சேர்ந்த எஸ். சிகாமணி என்பருடையது என அடையாளம் காணப்பட்டது. அவற்றை மஸ்கெலியா பொலிஸாரின் ஊடாக , ஓட்டோ சாரதியான மஸ்கெலியா க்ளேன்டின் தோட்டத்தில் வசிக்கும் சுப்ரமணியம் சந்திரமோகன் என்பவரிடம் கையளித்தார்.



# வீதியை புனரமைக்க கோரி டன்சினனில் ஆர்ப்பாட்டம்

பூண்டுலோயாவிலிருந்து டன்சினன் வழியாக நுவரெலியா செல்லும் பிரதான வீதியை வெகுவிரைவில் புனரமைத்து தருமாறு வலியுறுத்தி, சுமார் 12 தோட்டங்களைச் சேர்ந்த மக்கள் இணைந்து நேற்று (12) பாரிய ஆர்ப்பாட்டத்தை முன்னெடுத்தனர்.

பதாதைகளை ஏந்தியவண்ணம், கோஷங்களை எழுப்பியவாறும், கறுப்பு கொடிகளை தாங்கியவாறும் இப்போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

பூண்டுலோயா, கிகிலியாமான 3ஆம் கட்டை பகுதியிலிருந்து ஆரம்பமான இந்த ஆர்ப்பாட்ட பேரணி, டன்சினன் காந்திபுரம், டன்சினன் மத்திய பிரிவு, டன்சினன் கீழ்பிரிவு, சீன் கீழ்பிரிவு ஊடாக பூண்டுலோயா பஸ் தரிப்பிடத்தை வந்தடைந்தது.

அதன்பின் அங்கு ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்பட்டு, போராட்ட ஏற்பாட்டுக்குழுவால் ஊடக சந்திப்பொன்றும் நடத்தப்பட்டது.

12 தோட்டங்களைச் சேர்ந்த மக்கள், டன்சினன் வீதியின் விடியலுக்காக முன்னெடுக்கப்பட்ட பேரணிக்கு 12 தோட்டங்களைச் சேர்ந்தவர்கள்







முழு ஆதரவையும் வழங்கினர். மதகுருமார்களும் இப்போராட்டத்தில் கலந்து கொண்டனர்.

அத்தோடு, பூண்டுலோயா நகரங்களில் உள்ள அனைத்து வர்த்தக நிலையங்களும் மூடப்பட்டு இப்போராட்டத்திற்கு ஆதரவு தெரிவித்திருந்தமை குறிப்பிடதக்கது.

# கௌரவிப்பு

ஆ.ரமேஸ்

வலப்பனைகல்விவலயத்தில் ஆரம்பப் பிரிவு பாடசாலைகள் மற்றும் ஆயிரம் பாடசாலை அபிவிருத்தி திட்டத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் ஓய்வு பெற்ற அதிபர்கள், ஆசிரியர்கள் மற்றும் வலய கல்விப் பணிப்பாளர்களின் சேவை நலனை பாராட்டி அவர்களை கௌரவிக்கும் நிகழ்வு சனிக்கிழமை (11) காலை இடம்பெற்றது.

இராகலை உயர் நிலை பாடசாலையின் பாரதி மண்டபத்தில்

ஆரம்பப் பிரிவு பாடசாலைகளின் உதவி கல்விப் பணிப்பாளர் கே.யசோதரன் தலைமையில் இடம் பெற்றது.

இந்த நிகழ்வில், அதிதிகளாக வலப்பனை கல்வி வலய பணிப்பாளர் திருமதி டி.எம்.எம்.திஸாநாயக்க, முன்னாள் கல்விப் பணிப்பாளர் பி.பி.நவரத்ன,உட்பட உதவி கல்விப் பணிப்பாளர்களான வி.யோகராஜ், ஏ.கே. அலிக்வெல உட்பட அதிபர்கள்,ஆசிரியர்கள் கலந்து கொண்டனர்.

இதன்போது தரம் 5 புலமை பரிசில் பரீட்சையில் 2019 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரை சிறந்த பெறுபேறுகளை பெற்றுவதற்கு தங்களை அர்ப்பணித்த ஆசிரியர்களும் கௌரவிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.



# இளம்பெண்ணைக் கொன்று சேற்றுக்குள் புதைப்பு

## இராணுவ சிப்பாய் கைது

மொஹொமட் ஆஸிக், ஷேன் செனவிரத்ன

கொடூரமான முறையில் படுகொலை செய்யப்பட்டு, சேற்றுக்குள் புதைக்கப்பட்ட நிலையில் 26 வயதான திருமணமான பெண்ணின் சடலமொன்றை பொலிஸார் கண்டெடுத்துள்ளனர்.

கண்டி, அலவத்துகொட பொலிஸ் எல்லைக்கு உட்பட்ட விலான பல்லேகம எல்லேகடே என்ற பிரதேசத்தில் வசித்து வந்த அப்பெண் பிள்ளைகள் இல்லாத நிலையில் கணவருடன் வீட்டில் தனியாக வசித்து வந்துள்ளார் எனப் பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கடந்த 10ஆம் திகதி இரவு கிராமத்தில் உள்ள மரண வீடொன்றுக்கு கணவர் சென்றிருந்துள்ளதுடன் மீண்டும் கணவர் வீட்டுக்கு வந்த பின் மனைவியைக் காணவில்லை. அது தொடர்பில் பொலிஸாருக்குத் தகவல் கொடுத்துள்ளார்.

அதன் பின்னர், அனைவரும் குறித்த பெண்ணை சுற்றுவட்டாரப் பகுதிகளில் தேடிய நிலையில் அவரது சடலம் வீட்டில் இருந்து சுமார் 100 மீற்றர் தொலைவில் உள்ள வயலில் சேற்றில் புதைக்கப்பட்டிருந்த நிலையில் கண்டுபிடிக்கப்பட்டது.

சம்பவம் நடந்த அன்று இரவு 9.30 மணியளவில் அலறல் சத்தம் ஒன்று கேட்டதாகவும், கதவைத் திறந்து பார்த்தபோது சத்தம் கேட்கவில்லை என்றும் அயலவர்கள் கூறுகின்றனர். அலவத்துகொட விலான பல்லேகம எல்லேகடே பிரதேசத்தில் வசித்து வந்த தனுகா மதுவந்தி என்ற பெண்ணேஇவ்வாறு படுகொலை செய்யப்பட்டுள்ளார்.

சடலம் இருந்த இடத்திலிருந்து மோப்ப நாய்ப் பிரிவின் நாய் ஒன்று விடுவிக்கப்பட்டதையடுத்து, அந்த நாய் சுமார் மூன்று கிலோமீற்றர் தூரம் சுற்றி வீடொன்றுக்கு சென்றுள்ளதுடன் அவ் வீட்டில் வசிக்கும் திருமணமான ஒருவரின் அறைக்குள் சென்று நின்றுக்கொண்டது.



அதன்பின்ன அவ்வீட்டில் இருந்த நபர், சந்தேகத்தின் பேரில் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார். இது தவிர மேலும் பலரிடம் பொலிஸார் விசாரணை நடத்தி வருகின்றனர்.

சம்பவத்துடன் தொடர்புடையவர் என்ற சந்தேகத்தின் பேரில், இராணுவ சிப்பாய் ஒருவர் கைது செய்யப்பட்டுள்ளார்.

குறித்த பெண்ணிடம்இராணுவ சிப்பாய் பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்துள்ளார் என்பதும் அதனை அவர் நிராகரித்துள்ளார் என்பதும் விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.



# கூடாத உறவைக் கொண்டவளுக்கு மதுகொடுத்து துஷ்பிரயோகம்

சுமணசிறி குணத்திலக்க

திருமணமான பெண்ணொருவருடன் கூடாத உறவைக் கொண்டிருந்த நபரொருவர், அந்தப் பெண்ணுக்கு மதுபானம் கொடுத்து பாலியல் துஷ்பிர யோகம் செய்துள்ளார். இந்த சம்பவம், தனமல்வில பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

22 வயதான பெண்ணையே அவரது வீட்டுக்கு அருகில் வசிக்கும் நபர், கடந்த 7ஆம் திகதியன்று, கடுமையாக தாக்கி, பலவந்தமாக மதுபானம் கொடுத்து பாலியல் துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளார் என்பது விசாரணைகளின் ஊடாக கண்டறியப்பட்டுள்ளது.

இந்த பெண்ணின் கணவர், சிறைச்சாலையில் தடுத்துவைக்க ப்பட்டுள்ளார். இதனையடுத்தே, அப்பெண்ணுக்கும் அயலில் வசிப்பவருக்கும் இடையில் தொடர்பு ஏற்பட்டுள்ளது. அந்த தொடர்பு காலபோக்கில் கூடாத உறவாக மாறியுள்ளது.

சம்பவதினம் தனது இரண்டு நண்பர்களுடன் மதுபானம் அருந்த நபர், அந்தப் பெண்ணை உறவினர் வீட்டுக்கு அழைத்துச் சென்று, கடுமையாக தாக்கியதுடன், மதுபானத்தையும் பருக வைத்து, துஷ்பிரயோகத்துக்கு உட்படுத்தியுள்ளார்.

பாதிக்கப்பட்ட பெண், ஹம்பாந்தோட்டை வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டதுடன், சந்தேகநபர் பிரதேசத்தில் இருந்தே தப்பியோடிவிட்டார் எனத் தெரிவித்த பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளதாக தெரிவித்தனர்.

# அபிவிருத்தி சங்க பொதுக்கூட்டம்

பசறை கல்வி வலயத்துக்கு உட்பட்ட கோணக்கலை தமிழ் ஆரம்ப பாடசாலையின் வருடாந்த அபிவிருத்தி சங்க பொதுக்கூட்டம் சனிக்கிழமை (11) நடைபெற்றது. இதன்போது பசறை கல்வி பணிப்பாளர் திருமதி ஸரீனா பேகம், உதவி கல்விப் பணிப்பாளர்கள் திருமதி. அனோமா, திருமதி. கவிதாஞ்சலி ஆகியோரும் கலந்து கொண்டனர்.

நடராஜா மலர்வேந்தன்





# விளக்கமளிக்கும் கலந்துரையாடல்

இரா.யோகேசன்

கண்டி, செட்டிக் கரிட்டாஸ் நிறுவனத்தின் ஊடாக ஹட்டன் பிரதேசத்தை மயப்படுத்திய சிவில் சமூக அமைப்புகளுக்கான எட்வகேசி அதாவது பரிந்துரை செய்வது தொடர்பான விளக்கமளிக்கும் கலந்துரையாடல் ஹட்டன் செட்டிக் கரிட்டாஸ் நிறுவனத்தின் கேட்போர் கூடத்தில் சனிக்கிழமை (11) இடம்பெற்றது.

பெருந்தோட்ட மக்களின் வாழ்வில் ஒளியேற்றுவோம் என்ற இந்நிறுவனத்தின் கொள்கை விளக்கத்துக்கு ஏற்ப பெருந்தோட்ட மக்களின் வாழ்வியல் பிரச்சினைகள் குறித்தே இடம்பெற்றது. மேலும், எட்வகேசி அதாவது பரிந்துரை செய்தல் செயலமர்வினை அம்பகமுவ செயலகத்தின் உத்தியோகத்தர் மோகனராணியினால் முன்னெடுக்கப்பட்டு விளக்கமளிக்கப்பட்டது.

இதன்போது எட்வகேசி அதாவது பரிந்துரைத்தல் என்பது தொடர்பான விளக்கம், எட்வகேசியில் உள்ளடங்கக்கூடிய விடயங்களான கம்பனி சட்டங்கள்,மனிதஉரிமை சட்டம்,பாராளுமன்ற சட்டங்கள், நுகர்வோர் சட்டம் போன்றவற்றுடன் தற்போது நடைமுறையில் காணப்படக்கூடிய ஏனைய சட்டங்கள்,அத்துடன் இச்சட்டங்கள் மக்களுக்கு எவ்வகையில் நன்மை ஏற்படுத்த கூடியன என்பன ஆராயப்பட்டன.

அத்துடன் இலங்கையில் உள்ள நீதி மன்றங்கள்,நீதி துரையில் உள்ளடங்கும் நீதிபதிகள் மற்றும் இவர்கள் சமூகத்திற்கு எவ்வகையில் தமது சட்டங்களினூடாக மக்களுக்கு உதவுகின்றனர். தவிரவும் நீதிமன்றங்களில் எவ்வகையான வழக்குகள் தொடரப்படுகின்றது என்பது தொடர்பான விளக்கங்களும் இதனோடு கல்வி துறையில் காணப்படும் கல்விச்சட்டங்கள் அது சமூகத்தில் ஏற்படுத்திய தாக்கங்களும் விளக்கமளிக்கப்பட்டது.

மனிதர்களுக்கு ஏற்பட கூடிய உடல் ரீதியான பாதிப்புகள் , உள ரீதியான பாதிப்புகள் என்பன இங்கு கலந்துரையாடப்பட்டது. இத்துடன் பிரச்சினைகள் அந்த பிரச்சினைகளை அணுகும் முறைகள் என்பனவும் ஆராயப்பட்டது.

இதை தொடர்ந்து கலந்துக்கொண்ட சிவில் சமூக செயற்பாட்டாளர்களினால் தற்போது சமூகத்தில் காணப்படக்கூடிய பிரச்சினைகள் இனங்காணப்பட்டதோடு அதற்கு எவ்வகையில் பரிந்துரைகளை மேற்கொள்ள முடியும் அதாவது தீர்வுகளை பெற்றுக்கொள்வது தொடர்பில் கலந்துக்கொண்டவர்களினால் ஆலோசனைகள் முன்வைக்கப்பட்டன.



# பெட்டரிகளை திருடியவர் கைது

ராமு தனராஜா

நிறுத்தி வைக்கப்பட்டுள்ள வாகனங்களில் வாகன பெட்டரிகளை திருடியவர் பண்டாரவளை பொலிஸாரினால் கைது.

ஹல்தமுள்ள பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கிரிவானாகம என்ற பகுதியில் வைத்து வாகனங்களில் உள்ள பெட்டரி மற்றும் வாகன கடத்தலில் ஈடுபட்டு வந்த 38 வயதுடைய இலுக்கேட்டிய மந்தன்ன கிரிவானகம பகுதியைச் சேர்ந்த இளைஞர் ஒருவர் பண்டாரவளை பொலிஸாறினால் கைது செய்யப்பட்டார்.

குறித்த சந்தேக நபரிடம் விசாரணைகளை மேற்கொண்ட பின்னர் பண்டாரவளை நீதவான் நீதிமன்றதினால் ஆஜர் படுத்துவதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருவதாக பண்டாரவளை பொலிஸார் தெரிவித்தனர்.



# ஆடு திருடிய மூவர் கைது

செ.தி.பெருமாள்

மஸ்கெலியா பொலிஸ் பிரிவில் உள்ள சாமிமலை, பெயர்ளோன் தோட்டத்தில் வயது முதிர்ந்த பெண்ணொருவர் வளர்த்து வந்த ஆடுகளில் பெறுமதி வாய்ந்த ஆடு ஒன்றை களவு எடுத்தனர் என்றக் குற்றச்சாட்டின் கீழ், மூன்று பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

அந்த மூவரில் இருவர் அதே தோட்டத்தைச் சேர்ந்தவர்கள் என்றும் மற்றுமொருவர், நோர்வூட் தோட்டத்தை சேர்ந்தவர் என்றும் மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமார தெரிவித்தார்.

# அகழ்ந்த இரண்டு பிக்குகள் கைது

ஷேன் செனவிரத்ன

பேராதனை பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட கன்னொருவர் மலையில், தொல்பொருள் அகழ்ந்து கொண்டிருந்தனர் என்றக் குற்றச்சாட்டின் கீழ், 30-58 வயதுகளுக்கு இடைபட்ட பிக்குகள் இருவர் கைது செய்யப்பட்டனர்.

வரலாற்றுச் சிறப்புமிக்க கன்னொருவப் போர் இடம்பெற்ற இடத்துக்கு மேலே அமைந்துள்ள இந்த மலை பிரதேச மக்களால் டிவிடோஸ் கல் என்றும் அழைக்கப்படுகிறது.

கைது செய்யப்பட்ட சந்தேகநபர்கள் இருவரையும் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்த நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

# சிறை கைதி மீது பாலியல் வன்கொடுமை

ஆரியவங்ச

பதுளை சிறைச்சாலையில் கைதி ஒருவர் பாலியல் வன்கொடுமைக்கு உட்படுத்தப்பட்ட சம்பவம் தொடர்பில் கிடைக்கப்பெற்ற முறைப்பாட்டின் பிரகாரம் நேற்று (12) விசாரணை நடத்தப்படவுள்ளதாக பதுளை பொலிஸார் தெரிவித்தனர்.

22 வயதான இந்த கைதி கஞ்சா வைத்திருந்த குற்றச்சாட்டின் பேரில் 25,000 ரூபாய் அபராதம் செலுத்த முடியாததால் சிறைத்தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

சிறையில் திடீரென சுகயீனமடைந்த அவர், சிறைச்சாலையின் மருத்துவப் பிரிவில் அனுமதிக்கப்பட்டிருந்தார். அப்போதே இனந்தெரியா நபர், இந்தக் குற்றத்தை செய்துள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

சம்பவத்திற்கு முகங்கொடுத்த கைதியை வைத்திய பரிசோதனைக்காக பதுளை போதனா வைத்தியசாலையின் சட்ட வைத்திய அதிகாரியிடம் ஒப்படைத்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# கலைக்க களமிறக்கப்படுவது குண்டர்கள் கூட்டமா?

அரசாங்கத்துக்கு எதிராக மேற்கொள்ளப்படும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள், நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே செல்கின்றன. கொழும்பிலும், பிரதான இடங்களில் மட்டுமன்றி, வெளியே சிறு, சிறு நகரங்களிலும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

புதிய வரிக்கொள்கை, வரி அதிகரிப்புக்கு எதிராக, மின் கட்டண அதிகரிப்பு எதிராக முன்னெடுக்கப்படும் ஆர்ப்பாட்டங்களுக்கு அப்பால், உள்ளூராட்சி மன்றத் தேர்தலை நடத்து, பயங்கரவாத தடைச்சட்டத்தை நீக்கு உள்ளிட்ட கோரிக்கைகளை முன்வைத்தும் கோஷங்களை எழுப்பியும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

எதிர்த்தரப்பில் இருக்கும் அரசியல் கட்சிகள், பல்கலைக்கழக மாணவர் அமைப்புகள், தொழிற்சங்கங்கள் மற்றும் பொது அமைப்புகள் ஆகியவற்றால் முன்னெடுக்கப்படும் இந்த எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களுக்கு அப்பால், சர்வதேச மகளிர் தினத்தையொட்டி மகளிர் அமைப்புகளும் ஆங்காங்கே எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை முன்னெடுத்து வருகின்றன.

கொழும்புக்கு வெளியே வடக்கு, கிழக்கை தவிர்த்து முன்னெடுக்கப்படும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் மீது பெரும்பாலும் தாக்குதல்கள் மேற்கொள்ளப்படுவதில்லை. வடக்கு, கிழக்கிலும் கொழும்பிலும் அதனை அண்மித்த நகரங்களிலும் முன்னெடுக்கப்படும் எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களின் மீது கண்ணீர்புகைக் குண்டுகள் வீசப்படுகின்றன. நீர்த்தாரை பிரயோகங்களும் முன்னெடுக்கப்படுகின்றன.

கொழும்பு பல்கலைக்கழகத்துக்கு அருகே அண்மையில் முன்னெடுக்கப்பட்ட எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தை கலைப்பதற்காக பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகள் கடுமையான விமர்சனத்துக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன. சுமார் 16 வருடங்களுக்கு முன்னர் கொள்வனவு செய்யப்பட்ட கண்ணீர்புகைக் குண்டுகள் பயன்படுத்தப்பட்டதாக கடுமையான குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்பட்டன.

அத்துடன், நீர்த்தாரை பிரயோகத்தில் மலம் கலக்கப்பட்டதாகவும், இரசாயன மூலகங்கள் கலக்கப்பட்டதாகவும் அதனாலேயே, ஆர்ப்பாட்டக்காரர்கள் மட்டுமன்றி, வீதியோரத்தில் சென்று கொண்டிருந்தவர்களும் மாணவர்களும் பாதிக்கப்பட்டனர் என்றும் குற்றச்சாட்டப்பட்டுள்ளது.

அவ்வகையான குற்றச்சாட்டுகளை மறுத்த அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, பாடசாலைகளுக்கு அண்மித்த பிரதேசங்களில், எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்களை முன்னெடுக்கவேண்டாமென பாராளுமன்றத்தில் வைத்து வலியுறுத்தினார். எனினும், ஆர்ப்பாட்டத்தை கலைக்கச் சென்றிருந்த கலகமடக்கும் பொலிஸார் குண்டாந்தடிகளை வைத்திருக்கவில்லை. அதற்குப் பதிலாக முதுகுப்புறத்தில் காட்டுக் கம்புகளையே வைத்திருந்துள்ளனர்.

ஆர்ப்பாட்டங்களை கலைப்பதற்காக பொல்லுகளுடன் வருபவர்கள் யார்? அவர்கள் அவன் கார்ட்டால் இயக்கப்படும் குழுவா? என்று தேசிய மக்கள் சக்தியின் தலைவரும் எம்.பியுமான அனுரகுமார திஸாநாயக்க பாராளுமன்றத்தில் கேள்வியெழுப்பினார்.

எனினும், பாராளுமன்றத்தில் கடந்த 8ஆம் திகதியன்று உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அரசாங்கத்தின் தற்போதை செயற்பாட்டை முடக்கும் வகையில் செயற்படுபவர்களுக்கு எதிராக கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் என்று கூறியிருந்தார். அதற்கு பின்னரே இவ்வாறான தாக்குதல்கள் முன்னெடுக்கப்படுகின்றன என்பது கவனிக்கத்தக்கது.




தமிழ்Mirror க்கு எழுதுங்கள்

www.tamilmirror.lk


தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.

அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

தங்களுக்குப் பிடித்தவர்களைவிட, தங்களுக்குப் பிடிக்காதவர்கள் பற்றியே மனிதர்கள் பெரும்பாலும் பேசிக் கொண்டிருக்கிறார்கள். திரைப்படங்களில் கதாநாயகனுக்கு கிடைக்கும் முக்கியத்துவம், வில்லனுக்கும் கிடைக்கும்; வில்லன், வில்லி இல்லாதுவிட்டால், கதைகளில் சுவாரஸ்யம் இருக்காது.

ஆனால், அநேகர் வில்லன்களை விரும்புவதுபோல, விரும்பாத மனிதர்களையே விமர்சனம் செய்வார்கள். ஆனால், இவர்கள் சொல்வதைப்போல், இவர்கள் குறிப்பிடும் நபர், அவர் போல் ஏசிக்கொண்டே இருக்மாட்டார். நேரத்தைதச் செலவழிக்களவரையாவது திட்டுவதே சுவாரஷ்யமானது என எண்ணக்கூடும். பல ஆண், பெண்கள் கூடினால், பக்கத்துவீட்டுக்காரர்களின் பிரச்சினையையே ஆராய்வார்கள். இது ஒரு வன்முறை போன்றது.

ஒருவர் விடும் பிழைகளை நேரடியாகச் சுட்டிக்காட்டாமல், மறைமுகமாக அவரை வைது கொள்வது பிழையான அணுகுமுறையாகும். இதனால் என்ன லாபம்?

அதனை விடுத்து யாவரையும் ளபாராட்டி மகிழ்க! இதயம் இதனால் சுத்தமாகும். நல்லவற்றை மட்டும் பேசுக!

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

# உள்ளூராட்சித் தேர்தல்கள் - யாருக்கு வாக்களிப்பது




என்.கே.அஷோக்பரன்
Twitter: @nkashokbharan


இம்மாதம் நடக்கவிருந்த உள்ளூராட்சித் தேர்தல்கள் ஒத்திவைக்கப்பட்ட பின்னர், தற்போது 2023 ஏப்ரல் 25 ஆம் திகதியன்று உள்ளூராட்சித் தேர்தல்கள் நடைபெற வாய்ப்புள்ளதாக தேர்தல் ஆணைக்குழு அறிவித்துள்ளது. உள்ளூராட்சித் தேர்தல்கள் 2023 மார்ச் 9 அன்று நடைபெறவிருந்தன, ஆனால் இலங்கை தொடர்ந்து பொருளாதார நெருக்கடியை எதிர்கொள்வதால் ஏற்பட்ட நிதிப் பற்றாக்குறையால் குறித்த தினத்தில் தேர்தல் நடத்தப்பட முடியாது போனது தாமதமானது.

உயர்நீதிமன்றின் இடைக்கால உத்தரவைத் தொடர்ந்து, பாதீட்டில் தேர்தலுக்கென ஒதுக்கப்பட்ட நிதியை வழங்குவதைத் தடுக்க இடைக்கால தடைவிதிக்கப்பட்டதைத் தொடர்ந்து, தேர்தல்கள் நடப்பதற்கான சந்தர்ப்பம் உருவாகியுள்ள நிலையில், தற்போது தேர்தல் ஆணைக்குழு தேர்தல் நடத்தும் அதிகாரிகளாக பணியாற்றும் மாவட்டச் செயலாளர்களுக்கு ஏப்ரல் 25ஆம் தேதியை உள்ளாட்சித் தேர்தலுக்கான புதிய திகதியாக அறிவிக்க அறிவுறுத்தியுள்ளது.

உள்ளூராட்சி அதிகார சபைகளின் தேர்தல் கட்டளைச் சட்டத்தின் உப பிரிவு 38(1)(c) இன் படி, தேர்தல் ஆணைக்குழு தேர்தல் திகதியை நிர்ணயித்த பின்னர், தேர்தல்களை அறிவிக்கும் தனி வர்த்தமானிகளை பிராந்திய தேர்தல் அதிகாரிகள் வெளியிடுகின்றனர். ஆகவேதான், அவர்களுக்கான தேர்தல் திகதி அறிவுறத்தலை தேர்தல்கள் ஆணைக்குழு வழங்கியுள்ளது.

உள்ளூராட்சித் தேர்தல் நடக்குமா இல்லையா, என்ற பத்து பில்லியன் ரூபாய் கேள்வி ஒரு புறமிருக்க, இந்தவிடத்தில் உள்ளூராட்சி மன்றங்களின் வகிபாகமென்ன என்பதைப் புரிந்துகொள்ளுதல் அவசியமாகிறது. உள்ளூராட்சி மன்றங்களின் வகிபாகம் பற்றி அழுத்திச் சொல்வதற்கான தேவை எழுந்திருக்கக் காரணம், இந்த உள்ளூராட்சித் தேர்தல்களை நாட்டின் எதிர்காலத்தை மாற்றப்போகும், ஆட்சியை, ஆட்சிமுறையை மாற்றப்போகும் தேர்தலாக பிரதான எதிர்க்கட்சிகள் உருவகித்து வரும் பிரசாரத்தின் உண்மைத்தன்மை பற்றிய தெளிவு வாக்காளர்களிடம் ஏற்பட வேண்டும் என்பதாகும்.

உள்ளூராட்சி மன்றங்களென்றால் என்ன? உள்ளூராட்சி மன்றங்கள் என்பவை இலங்கையின் மூன்றாவது மற்றும் கீழ்மட்ட அரசாங்கக் கட்டமைப்பாகும். மத்திய அரசாங்கம் முதல் மட்டமாகவும், மாகாண சபைகள் இரண்டாம் மட்டமாகவும் உள்ளன எனலாம். உள்ளூராட்சி மன்றங்கள் தமது பகுதிக்குட்பட்ட பல்வேறு முக்கிய பொறுப்புக்களை நிறைவேற்றுகின்றன.

வீதிகள், நடைபாதைகள், உள்ளூர் போக்குவரத்து உட்கட்டமைப்பு, சுகாதாரம், வடிகால், கழிவகற்றல், வீடுகள், சுற்றுச்சூழல் பாதுகாப்பு, பொது நூலகங்கள், பொது பூங்காக்கள் மற்றும் பொழுதுபோக்கு வசதிகள் உள்ளிட்ட பல்வேறு உள்ளூர் பொது சேவைகளை வழங்குவதும், உறுதிப்படுத்துவதும் உள்ளூராட்சி மன்றின் பணிகள். ஆகவே மக்களின் வாழ்வோடு நேரடியாகத் தொடர்புடைய பல அடிப்படைப் பணிப்பொறுப்புக்கள் உள்ளூராட்சி மன்றின் பாற்பட்டது. மிகப் பொதுவான உதாரணமாக, குப்பை அள்ளுதல், ஊரைச் சுத்தப்படுத்துதல், வடிகால் அமைத்தல், சிறிய வீதிகளை அமைத்தல், சீரமைத்தல், ஆரம்ப சுகாதார வசதிகளை வழங்குதல், கட்டாக்காலி நாய்களைப் பிடித்தல், தீயணைப்பு மற்றும் அவசர உதவி சேவைகளை நடத்துதல், ஊர் பொதுச்சந்தைகளை நிர்வகித்தல், ஊர் மயானங்களை நிர்வகித்தல் போன்றவற்றையெல்லாம் செய்வது உள்ளூராட்சி மன்றங்களே! இந்த உள்ளூராட்சி மன்றங்கள், பெருநகரங்களில் இவை "மாநகரசபைகள்" என்றும், நகரங்களில் "நகரசபைகள்" என்றும், ஏனைய பிரதேசங்களில் "பிரதேச சபைகள்" என்றும் அறியப்படுகின்றன.

மாநகரசபைகள், 1947 ஆம் ஆண்டின் 29 ஆம் இலக்க மாநகர சபை கட்டளைச் சட்டத்தினாலும், நகர சபைகள், 1939 ஆம் ஆண்டின் 61 ஆம் இலக்க நகர சபைகள் கட்டளைச் சட்டத்தினாலும், பிரதேச சபைகள், 1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தினாலும் நிர்வகிக்கப்படுகின்றன. சமூகங்கள் நன்கு நிர்வகிக்கப்படுவதையும், வளமானதாக இருப்பதையும், அவர்களின் குடிமக்களின் தேவைகளுக்குப் பதிலளிக்கக்கூடியதாக இருப்பதையும் உறுதி செய்வதில் உள்ளூராட்சி மன்றங்களின் பங்கு முக்கியமானது. உள்ளூராட்சி மன்றங்கள் இல்லாமல், அத்தியாவசிய சேவைகளை வழங்குவதிலும், அடிமட்ட அளவில் மக்களை பிரதிநிதித்துவம் செய்வதிலும் மிக்பெரிய இடைவெளி ஏற்பட்டுவிடும்.

ஆனால், உள்ளூராட்சி மன்றத் தேர்தல்கள், இன்றை எதிர்க்கட்சிகள் மேடைக்கு மேடை முழங்குவதைப் போல, நாட்டின் எதிர்காலத்தை மாற்றப்போகும், ஆட்சியை, ஆட்சிமுறையை மாற்றப்போகும், விலைவாசியைக் குறைக்கப்போகும், பொருளாதாரத்தை மேமம்படுத்தப்போகும், அந்நியச் செலாவணி வருவாயை அதிகரிக்கப்போகும், வரிகளைக் குறைக்கப்போகும், இனவாதத்தை இல்லாதொழிக்கப்போகும் தேர்தலா என்றால், அதற்கான உறுதியான பதில், உள்ளூராட்சி மன்றங்களினால் இந்த எந்த விடயத்திலும் மாற்றங்களைக் கொண்டுவர முடியாது என்பதுதான்.

உள்ளூராட்சித் தேர்தல்கள் உள்ளூர் சமூகங்களின் அன்றாட வாழ்க்கையில் தாக்கத்தை ஏற்படுத்தினாலும், அவை நாட்டின் ஆட்சிக் கொள்கையை மாற்ற வாய்ப்பில்லை. ஏனெனில், வரிக் கொள்கை, பொருளாதாரக் கொள்கை, நாட்டுக்கான சட்டவாக்கம், மற்றும் தேசியப் பாதுகாப்பு போன்ற மாற்றங்கள் போன்ற முழு நாட்டையும் பாதிக்கும் முக்கிய கொள்கை முடிவுகளை எடுக்கும் அதிகாரம் உள்ளூராட்சி மன்றங்களுக்கு இல்லை. ஆட்சிக் கொள்கை பொதுவாக பாராளுமன்றத் தேர்தல் மூலம் தேர்ந்தெடுக்கப்படும் மத்திய அரசாங்கத்தால்தான் தீர்மானிக்கப்படுகிறது.

முழு நாட்டையும் பாதிக்கும் முடிவுகளை எடுப்பதற்கு மத்திய அரசாங்கமே பொறுப்புடையதும், அதிகாரமுடையதுமாகிறது. குடிமக்களின் வாழ்க்கையில் குறிப்பிடத்தக்க தாக்கத்தை ஏற்படுத்தக்கூடிய முக்கிய கொள்கை மாற்றங்களை அறிமுகப்படுத்தும் அதிகாரம் மத்திய அரசாங்கத்திடமே உள்ளது. சில சந்தர்ப்பங்களில், உள்ளாட்சித் தேர்தல் முடிவுகள் பொதுக் கருத்து மற்றும் அரசியல் உணர்வுகளில் பரந்த போக்குகளைப் பிரதிபலிக்கலாம். எவ்வாறாயினும், இவ்வாறான சந்தர்ப்பங்களிலும் உள்ளூராட்சி சபைத் தேர்தல்கள் நாட்டின் ஆட்சிக் கொள்கையை நேரடியாக மாற்றுவதற்கு வாய்ப்பில்லை. இந்த உண்மையை வாக்காளர்கள் உணரவேண்டும்.

உண்மையில், உள்ளூராட்சித் தேர்தல்கள் பிரச்சாரத்தின்போது, போட்டியிடும் கட்சிகள் வழங்க வேண்டிய உறுதிமொழிகள், உள்ளூராட்சி மன்றின் அதிகாரம், பொறுப்புக்கள் சார்ந்து அமைய வேண்டும். உதாரணமாக, தினமும் முறையாக குப்பை அகற்றுவோம், குழந்தைகளுக்கான தரமான பாலர் பாடசாலைகளை ஊரின் பல பகுதிகளிலும் அமைப்போம், சுற்றுச்சூழல் பாதுகாப்பிற்கும், நுளம்புகளை இல்லாதொழிப்பதற்கும் உடனடி நடவடிக்கை எடுப்போம், எல்லா வீதிகளையும் முறையாகச் செப்பனிட்டு பாதுகாப்போம், அனைத்து வீதிகளுக்கும் சூரிய சக்தியைச் சேமித்து இரவில் ஒளிரும் மின்விளக்கு வசதியை வழங்குவோம், வீதிகளை தினமும் சுத்திகரிப்போம், பொதுப் பூங்காக்களை அமைத்து, பராமரித்துப் பாதுகாப்போம், ஊர்க் குளங்களை தூர்வாரிப் பாதுகாப்போம், சுற்றுச்சூழலுக்கு தீங்கு தரும் செயற்பாடுகளை அனுமதியோம், வீட்டுவரிகளை சமநீதிக் கொள்கைகளின்படி நடைமுறைப்படுத்துவோம் போன்ற உள்ளூராட்சி மன்றுகளின் அதிகாரத்திற்குட்பட்ட விடயங்கள் தொடர்பிலான உறுதிமொழிகளை வழங்க வேண்டுமேயொழிய "சிஸ்டம் சேஞ்ச்", வரிகளைக் குறைப்போம், பொருளாதாரத்தை மாற்றியமைப்போம், என்று உள்ளூராட்சி மன்ற தேர்தல் மேடைகளில் முழங்குவதெல்லாம் அப்பட்டமான ஏமாற்று வேலை.

பொதுவாகவே, உள்ளூராட்சி மன்றிற்கு மக்கள் தமது பிரதிநிதியாகத் தேர்ந்தெடுக்கப்படுபவர், பெரும் அரசியல் விற்பன்னராக இருக்க வேண்டியவரல்ல. இது பாராளுமன்ற தேர்தல் அல்ல. இங்கு குறித்த ஊரைச் சேர்ந்த, அம்மக்களுக்கு காட்சிக்கு எளியனாக உள்ள, எப்போது மக்கள் அணுகக் கூடிய, ஒருவரைப் பிரதிநிதியாகத் தேர்ந்தெடுப்பதே மிகச் சிறந்த தெரிவாக அமையும். இரண்டு நாட்கள் குப்பையகற்ற உள்ளூராட்சி மன்றின் பணியாளர்கள் வரவில்லையென்றால், மக்கள் உடனடியகாகத் தொலைபேசி மூலம் அழைக்கவோ, நேரில் சந்திக்கவோ கூடியவராக அம்மக்களின் பிரதிநிதி இருக்க வேண்டும்.

ஆகவே உங்கள் வட்டாரத்தில் வாழ்கின்ற, மக்களோடு மக்களாக நிற்கும் ஒருவர்தான், உள்ளூராட்சி மன்றிற்கு உங்கள் பிரதிநிதியாகவதற்கு தகுதியுள்ள நபர். இங்கு கட்சி சார்பு என்பது கூட அவசியமானதொன்றல்ல. ஏனென்றால் இது பாராளுமன்றத் தேர்தலோ, மாகாண சபைத் தேர்தலோ அல்ல என்பதை மீண்டும் மீண்டும் ஞாபகத்திற் கொள்ளுதல் வேண்டும்.

கட்சிக்கு வாக்களிக்கிறோம் என்ற பெயரில், கட்சி நிறுத்திய யாரோ ஒருவருக்கு வாக்களித்துவிட்டு, நாளைக்கு தெருவிளக்கு எரியாவிட்டால், நீங்கள் தெரிவுசெய்த அந்த யாரோ ஒரு பிரதிநிதியை எங்கே சென்று தேடுவீர்கள்? உங்கள் வட்டாரத்திற்கு ஒரு பிரதிநிதியைத் தேர்ந்தெடுக்க வேண்டுமென்றால், கட்சி அடையாளங்களைத் தாண்டி, உங்கள் வட்டாரத்திற்கு சேவையாற்றக் கூடிய ஒருவரைத் தேர்ந்தெடுங்கள். அவர் சுயாதீனமாகக் கூட போட்டியிடுபவராக இருக்கலாம். அதுதான் உங்களுக்கு நன்மையானது. அதைவிடுத்து, ஆட்சி மாற்றம், கொள்கை மாற்றம் என சில கட்சிகள் காட்டும் பேய்க்காட்டலில் ஏமாந்துவிட வேண்டாம்.

## கடிதங்கள்

### வடக்கு மாகாண ஆளுநரின் கவனத்துக்கு

அழிக்கப்பட்ட ஆலயங்களை மீளக்கட்டுவதற்கு அனுமதி வழங்கவேண்டும். ஏனைய ஆலயங்களை விடுவிக்க இராணுவ நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று அகில இலங்கை இந்து மாமன்றத்தின் உபதலைவர் செஞ்சொல்செல்வர் கலாநிதி ஆறு. திருமுருகன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கை சைவ மக்களின் மிகத்தொன்மை வாய்ந்த வரலாற்றிடம் கீரிமலை இந்தப் பகுதியில் கடல் மட்டத்திலிருந்து மிகவும் உயரமான மலை போன்ற ஒரு பாறையில் ஆதிசிவன் கோயில் அமைந்திருந்தது. அந்தச் சிவன் கோயில் தற்போது இல்லை. மேலும், பெருமைமிக்க பெண் சித்தரான சடையம்மாவின் சமாதி கோயில் மடம் அதற்கருகில் இருந்த சங்கர சுப்பையர் சுவாமிகளின் சமாதி, கதிரவேலன் கோயில் இவற்றைக் காணவில்லை என்ற செய்தி சைவ மக்களுக்கு மிகவும் அதிர்ச்சியை தந்துள்ளது.

சுமார் 33 ஆண்டுகளுக்குப் பின்பு ஆலயத்தை தரிசிக்கலாம் என்று சென்ற மக்களுக்கு பேரதிர்ச்சியை தந்தது. இந்த விடயம் தொடர்பாக ஜனாதிபதி மற்றும் அமைச்சரவை பதிலளிக்க வேண்டும்.

இந்த ஆலயங்கள் தொடர்பாக தமிழ் பாராளுமன்ற உறுப்பினர்கள் உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும். அழிக்கப்பட்ட கோயில்கள் இருந்த இடங்களை சைவ மக்களிடம் உடனடியாக ஒப்படைக்க வேண்டும். பொதுமக்கள் தங்கள் நிலங்களை பார்வையிடுவதற்கும் அங்கு எஞ்சியுள்ள கோவில்களை தரிசிப்பதற்கும் வடக்கு மாகாண ஆளுநர் ஒழுங்குச் செய்ய வேண்டும் என்றும் கோரியுள்ளார்.

எஸ் தில்லைநாதன்

# Forbes Marshall இலங்கையில் 30 வருடங்களைப் பூர்த்தி



Forbes Marshall லங்கா பிரைவட் லிமிடெட், கடந்த மூன்று தசாப்த காலப்பகுதியில், நிறுவனத்தின் வெற்றிகரமான செயற்பாடுகளையும், இலங்கையின் புகழ்பெற்ற நிறுவனங்களுடனான வளர்ந்து வரும் பங்காண்மைகளையும் பிரதிபலித்து, தனது 30 வருடப் பூர்த்தியைக் கொண்டாடியது.

பத்தரமுல்ல, வோட்டர்ஸ் எட்ஜ் ஹோட்டலில் அண்மையில் இடம்பெற்ற இந்நிகழ்வில், இலங்கை மற்றும் மாலைதீவுகளின் பல்வேறு தொழிற்துறைகளைச் சேர்ந்த 500 க்கும் அதிகமான புகழ்பெற்ற நபர்கள் பங்கேற்றிருந்தனர். "செயன்முறை மற்றும் வலு வினைத்திறனுக்காக கைகோர்த்தல்" எனும் தலைப்பில் இடம்பெற்ற கருத்தரங்கில், செயன்முறை மற்றும் வலு வினைத்திறன் தொடர்பில் புத்தாக்கமான தீர்வுகள், கண்காணிப்பு மற்றும் மதிப்பாய்வு அல்லது வினைத்திறன் குறிகாட்டிகள் மற்றும் Steam System Score Card கருத்திட்டம் போன்றன தொடர்பான தொழில்நுட்ப அமர்வுகள் இடம்பெற்றன.

Forbes Marshall லங்கா என்பது Forbes Marshall குரூப் கம்பனியாக திகழ்கின்றது. Forbes Marshall இன் 75 வருடங்களுக்கு மேலான அனுபவத்துடன், Forbes Marshall லங்கா தற்போது, இலங்கையில் steam boilers, steam accessories, control instrumentation மற்றும் effluent மற்றும் emission monitoring systems போன்றவற்றுக்கான சந்தை முன்னோடியாகத் திகழ்கின்றது. 2018 ஆம் ஆண்டில், Forbes Marshall லங்கா, இலங்கை சிறந்த வலு சேவைகள் நிறுவனத்தின் வலு வினைத்திறன் மேம்படுத்தல் பிரிவில் Gold Flame விருதை Forbes Marshall லங்கா வெற்றியீட்டியிருந்தது.

இலங்கை மற்றும் மாலைதீவுகளுக்கான முகாமையாளர் லொஷான் பலயன்கொட தனது வரவேற்புரையில், இலங்கையில் 30 வருட கால பயணத்தை வெற்றிகரமாக முன்னெடுப்பதற்கு பங்களிப்பு வழங்கியிருந்த அனைவருக்கும் நன்றி தெரிவித்திருந்தார். கடந்த 75 வருட காலப்பகுதியில் உலகளாவிய ரீதியில் வியாபாரங்கள் மற்றும் சமூகங்களுக்கு Forbes Marshall வலுவூட்டுகின்றமை பற்றி குறிப்பிட்டிருந்தார். பேராதனை பல்கலைக்கழகம், மொரட்டுவ பல்கலைக்கழகம் மற்றும் றுகுணு பல்கலைக்கழகம் ஆகியவற்றின் பொறியியல் பீடங்களில் நிறுவப்பட்டுள்ள மூன்று steam ஆய்வுகூடங்களினூடாக பட்டதாரி மாணவர்கள் மற்றும் பொறியியலாளர்கள் மத்தியில் அறிவுப் பகிர்வினூடாக, எதிர்கால பணியாளர் செயலணிக்கு பங்களிப்பு வழங்குவதில் Forbes Marshall இன் பங்கு தொடர்பில் அவர் விளக்கமளித்திருந்தார்.

Forbes Marshall இன் Steam கட்டமைப்பு பிரிவின் பொது முகாமையாளர் சச்சின் மஹஜன் விளக்கமளிக்கையில், value of uptime, mainline trapping, process trapping மற்றும் condensate recovery தொடர்பில் விளக்கமளித்திருந்தார். steam கட்டமைப்பொன்றில் வலு மீட்சி சதவீதம் தொடர்பான புரிந்துணர்வை வழங்கும் condensate recovery factor (CRF) என அறியப்படும் condensate recovery சதவீதம் தொடர்பில் கவனம் செலுத்தப்படுவதன் முக்கியத்துவத்தை இவர் விளக்கியிருந்தார். ஒவ்வொரு வாடிக்கையாளர் வளாகத்திலும் விளக்கமான ஆய்வுகளை மேற்கொண்டு, எரிபொருள் கட்டணப் பட்டியலில் 1-5 சதவீத சேமிப்பை இலக்கு வைத்து Forbes Marshall பொறியியலாளர்கள் எவ்வாறு செயலாற்றுகின்றனர் என்பது பற்றி விளக்கமளித்திருந்தார்.

Forbes Marshall மற்றும் ஜேர்மனியின் KROHNE Messtechnik GmbH இன் இணை நிறுவனமான Krohne Marshall இன் பொது முகாமையாளர் அதுல் சிங் குறிப்பிடுகையில், மதிநுட்பமான அளவீட்டுப் பெறுமதி பற்றி விளக்கமளித்திருந்தார். எய்தப்பட்ட நுகர்வு மற்றும் சேமிப்பு என்பன தொடர்பில் கண்காணிப்பு மற்றும் அளவீடு போன்றவற்றில் தொழிற்துறையினால் மேற்கொள்ளப்படும் முதலீடுகள் தொடர்பிலும், KROHNE தயாரிப்புத் தெரிவுகள் எவ்வாறு அவற்றை துல்லியமாக கண்காணிக்க உதவுகின்றன என்பது பற்றிய விளக்கங்களை வழங்கியிருந்தார்.

நிகழ்வின் இறுதியாக, Forbes Marshall இன் வலுச் சேவைகள் பிரிவின் சிரேஷ்ட முகாமையாளர் பி.சி. பிரகாஷ் விளக்கமளிக்கையில், Steam System Score Card பற்றிக் குறிப்பிட்டிருந்ததுடன், Forbes Marshall இன் 75 வருடங்களுக்கு மேலான செயன்முறைசார் அனுபவத்தினூடாக இந்தக் கொள்கையை எவ்வாறு வடிவமைக்க முடிந்தது மற்றும் பாதுகாப்பு மற்றும் வினைத்திறனை மேம்படுத்தவும், சூழலில் ஏற்படக்கூடிய தாக்கத்தை தணிப்பதில் எவ்வாறு இது பயனளிக்கின்றது என்பது பற்றியும் விளக்கமளித்திருந்தார். தொழிற்துறையின் சராசரி பெறுமதி தற்போது 70 சதவீதமாக அமைந்துள்ளதாக குறிப்பிட்ட அவர், முறையாக செயற்படுத்தலினூடாக ஆலைகளால் 100 சதவீத புள்ளிகளை எய்த முடியும் என்றார். இந்தச் சிறப்புப் பயணத்தில் Forbes Marshall உடன் கைகோர்க்குமாறு அவர் பார்வையாளர்களை அழைத்திருந்தார்.

# Dialog வழங்கும் 'METASTAGE'




டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி, XL Axiata உடன் இணைந்து, 'Futureverse' இல் நாட்டின் முதல் metaverse பொழுதுபோக்கு அனுபவமான 'METASTAGE' ஐ தொகுத்து வழங்கியது. இதில் இலங்கையின் புகழ்பெற்ற கலைஞர்களான BnS (பாத்தியா மற்றும் சந்துஷ்), உமாரியா மற்றும் இந்தோனேஷியாவின் Vicky Shu (விக்கி ஷு) ஆகியோரின் நிகழ்ச்சிகள் இடம்பெற்றன.

இலங்கை மற்றும் இந்தோனேசியா முழுவதும் உள்ள மெய்நிகர் பார்வையாளர்களுக்கு வழங்கப்படும் இந்த பிரத்தியேக டிக்கெட் நுழைவு நிகழ்வானது futureverse.dialog.lk இணையத்தளத்திற்குச் சென்று நேரடி நிகழ்ச்சிகளைக் காணும் வாய்ப்பை வழங்கியது. Metaverse என்பது ஒரு புதிய மற்றும் உற்சாகமான பொழுதுபோக்கு வழியை வழங்கும் ஒரு மெய்நிகர் உலகமாகும், மற்றும் டயலொக்கின் Futureverse இயங்குதளமானது, பயனர்கள் தங்கள் சொந்த கதாபாத்திரங்களை (அவதாரங்களை) உருவாக்கவும், எல்லையற்ற மெய்நிகர் சூழலில் மற்றவர்களுடன் தொடர்பு கொள்ளவும் வழிவகுக்கின்றது. இலங்கையின் இத்தகைய முதலாவது பொழுதுபோக்கு அனுபவத்தை வழங்குவதன் மூலம், இலங்கை டிஜிட்டல் பொழுதுபோக்கு வெளியில் டயலொக் முன்னணியில் உள்ளதுடன் மக்கள் பொழுதுபோக்கை அனுபவிப்பதற்கான புதிய மற்றும் புதுமையான பாதைகளை காணவும் வழி வகுக்கின்றது.

இந்த நிகழ்வின்போது கருத்து தெரிவித்த டயலொக் ஆசிஆட்டா பிஎல்சி குழுமத்தின் பிரதான புத்தாக்குனர் அதிகாரியும் கட்டிடக்கலை நிபுணருமான என்டனி ரொடக்ட் "இலங்கையின் முதல் metaverse பொழுதுபோக்கு அனுபவத்தை Futureverse ஊடே நடத்துவதில் நாங்கள் மகிழ்ச்சியடைகிறோம். அத்தோடு, அனைவரிடமிருந்தும் metaverse க்கு நேர்மறையான கருத்துக்கள் வருவதையறிந்தும் நாங்கள் மிகவும் திருப்தி அடைகின்றோம். எங்கள் வாடிக்கையாளர்களுக்கும், அனைத்து இலங்கையர்களுக்கும், புதுமையான மற்றும் தனித்துவமான அனுபவங்களுடன்.


# Cool Planet க்கு SLT-MOBITEL Fibre வசதி

SLT-MOBITEL, ஆடைகள் விற்பனைத் தொடரான Cool Planet (Pvt) Ltd, உடன் புரிந்துணர்வு உடன்படிக்கையில் கைச்சாத்திட்டிருந்தது. நுகேகொடயில் நிறுவப்பட்டுள்ள Cool Planet இன் புதிய கட்டடத் தொகுதிக்கு SLT-MOBITEL Fibre இணைப்பு வசதிகளை ஏற்படுத்திக் கொடுக்கும் வகையில் இந்த உடன்படிக்கை அமைந்துள்ளது.

இந்த உடன்படிக்கையில் SLT இன் நுகர்வோர் வியாபார ஆதரவு பொது முகாமையாளர் புஷ்பகுமார சமரசிங்க மற்றும் Cool Planet (Pvt) Ltd. இன் பிரதம நிறைவேற்று அதிகாரி ரிஸ்வி தாஹா ஆகியோர் இரு நிறுவனங்களினதும் பிரதிநிதிகள் முன்னிலையில் கைச்சாத்திட்டனர்.

Cool Planet (Pvt) Ltd. இன் நுகேகொடயில் நிறுவப்பட்டுள்ள புதிய கட்டடத் தொகுதி, 51,000 சதுர அடிப்பரப்பில் அமைந்துள்ளதுடன், 3 மாடிகளைக் கொண்டுள்ளது. இதில் பரந்தளவு நவநாகரீக ஆடைத் தெரிவுகள், அணிகலன்கள், அலங்காரப் பொருட்கள், காகிதாதிகள் மற்றும் வீட்டுப் பாவனைப் பொருட்கள் போன்றன அடங்கியுள்ளன. Cool Planet இன் ஒன்றிணைக்கப்பட்ட வர்த்தகநாமமிடல் மற்றும் புத்தாக்கமான தந்திரோபாயங்களைக் கொண்டு மேம்படுத்தப்பட்ட அலங்காரம் மற்றும் சொகுசான அனுபவத்தை வாடிக்கையாளர்களுக்கு பெற்றுக் கொடுக்கும் நோக்கின் அங்கமாக இந்தக் கட்டடத் தொகுதி அமைந்துள்ளது.

SLT-MOBITEL இனால் கட்டடத் தொகுதியினுள் Fibre தொழில்நுட்பம் வழங்கப்படும் என்பதுடன், வாடிக்கையாளர்களுக்கு ஸ்மார்ட் கட்டடத் தீர்வுகளை அனுபவிக்கக்கூடியதாக இருக்கும். அதிவேக இணைப்பைக் கொண்ட SLT-MOBITEL Fibre இனால், வாடிக்கையாளர்களுக்கு சிறந்த சொப்பிங் அனுபவம் சேர்க்கப்படும். விற்பனைகள், கையிருப்பு முகாமைத்துவம் மற்றும் தொடர்பாடல் போன்றவற்றை இலகுவாக மேற்கொள்ளும் வகையிலும், பாதுகாப்பு உள்ளம்சங்களைக் கொண்டதாகவும் இருக்கும்.






## இலங்கையில் முதலீடு செய்வதற்கு

# வாருங்கள்

### முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சின் பிரித்தானியாவுக்கான இலங்கை பிரதிநிதி கந்தையா கஜன் சர்வதேச முதலீட்டாளர்களுக்கு அழைப்பு



சர்வதேச முதலீட்டாளர்களை இலங்கையில் முதலீடு செய்ய வைப்பதற்கான பிரித்தானியாவுக்கான இலங்கை பிரதிநிதியாக முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சினால் நான் நியமிக்கப்பட்டுள்ளேன். என்னுடைய நியமனம் இலங்கையின் பொருளாதார மீட்பின் ஒரு மிகப் பெரும் பங்காக இருக்க வேண்டும் என நினைக்கின்றேன் என முதலீட்டு ஊக்குவிப்பு இராஜாங்க அமைச்சின் பிரித்தானியாவுக்கான இலங்கை பிரதிநிதி கந்தையா கஜன் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க, ஜனாதிபதியாக பதவி ஏற்றுக்கொண்டதன் பின்னர் உலக நாடுகளிலுள்ள இலங்கை புலம்பெயர்ந்தோரை இலங்கையில் முதலீடு செய்யுமாறு அழைப்பு விடுத்தார்.

கொழும்பில், வியாழன் இரவு, ஊடகவியலாளர்களை சந்தித்து, எதிர்கால திட்டங்கள், இனங்காணப்பட்டுள்ள வேலைத்திட்டங்கள் தொடர்பில், சந்தித்து கலந்துரையாடிய போதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இலங்கையின் பொருளாதாரத்தை நெருக்கடியில் இருந்து மீட்பதற்கு சர்வதேச நாடுகளிலுள்ளவர்களின் முதலீடுகள் மிக முக்கியமானது. இலங்கையில் காணப்பட்ட பொருளாதார நெருக்கடி மற்றும் அரசியல் நெருக்கடியால் சர்வதேச முதலீட்டார்கள் இலங்கையில் முதலீடு செய்வதற்கு தயக்கம் காட்டினர்.

தற்போது ஜனாதிபதியின் பொருளாதார மீட்புக்கான திட்டங்களால் இலங்கையின் பொருளாதாரம் மீண்டும் வளர்ச்சி பாதையை நோக்கி பயணிக்கின்றது என்றார்.

இவ்வாறான சந்தர்ப்பத்தில் உலக நாடுகளிலுள்ள சர்வதேச முதலீட்டாளர்களை இலங்கைக்கு அழைத்து வந்து அவர்களை இலங்கையில் முதலீடு செய்வதை ஊக்குவிக்கவே எனக்கு இந்தப் பொறுப்பு வழங்கப்பட்டுள்ளது.

இலங்கையில் முதலீடு செய்ய ஆர்வமுள்ள அனைத்து சர்வதேச முதலீட்டாளர்களையும் இணைத்து இலங்கையின் பொருளாதாரத்தை மீட்பதற்கான முயற்சியை எவ்வித தடையுமின்றி முன்னெடுக்க எதிர்பார்த்துள்ளேன்.

சர்வதேச முதலீட்டார்கள் இலங்கையில் முதலீடு செய்வதற்கு முன்னர் இலங்கையில் முதலீடு செய்வதற்கான பின்னணியை உருவாக்க வேண்டும்.

அதற்கு முன்னர் இலங்கையில் பாதுகாப்பான முறையில் முதலீடு செய்ய முடியும் என்ற நம்பிக்கையை முதலில் உறுதிப்படுத்த வேண்டும். அதற்கான அனைத்து ஏற்பாடுகளையும் செய்துவருகிறோம். முதலீடு செய்யும் முதலீட்டாளர்களுக்கு பாதுகாப்பான முதலீட்டு துறை மற்றும் திட்டங்களை அறிமுகம் செய்யவுள்ளோம்.

**மீண்டு வரும் இச்சந்தர்ப்பத்தில் சர்வதேச முதலீடுகள் இலங்கை பொருளாதாரத்தை மேலும் பலப்படுத்தும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்**

**இலங்கையில் முதலீடு செய்ய ஆர்வமுள்ள அனைத்து சர்வதேச முதலீட்டாளர்களையும் இணைத்து இலங்கையின் பொருளாதாரத்தை மீட்க எதிர்பார்த்துள்ளேன்**

**இலங்கையின் பொருளாதாரத்தை மீண்டும் பலப்படுத்தி, மக்களின் வாழ்வாதரத்தை மேம்படுத்துவதற்கு சர்வதேச முதலீட்டாளர்கள் கைகொடுக்க வேண்டும்**

அத்தோடு, தன்னிறைவு பொருளாதாரத்தை மேம்படுத்தும் திட்டங்களையும் தயாரித்து வருகின்றோம். இதற்கு மேலதிகமாக, இலங்கையில் கல்வி , விவசாயம் , மீன்பிடி , தொழில்நுட்பத்துறை என பலத்துறைகளில் முதலீடு செய்யும் வகையிலான திட்டங்களை தயாரித்துள்ளோம்.

இலங்கையில் சர்வதேச முதலீடுகள் அதிகரிக்கும் போது வேலைவாய்ப்புகளும் அதிகரிக்கும். இதனால்;, தற்போது நாட்டை விட்டு வெளியேறும் இளம் தலைமுறையினருக்கு இந்த நாட்டிலேயே இருந்து வேலை செய்வதற்கான வாய்ப்புகள் ஏற்படும்.

உதாரணமாக, கல்வித்துறையில் முதலீடுகள் அதிகரிக்கும் போது, அதிக பட்டதாரிகளை உருவாக்குவதற்கான பல்கலைக்கழக புலமைப்பரிசில்களை வழங்க முடியும். சர்வதேச பல்கலைக்கழகங்களில் படிப்பதற்கான வாய்ப்புகளை ஏற்பத்தி கொடுப்பதுடன், படித்தப் பின் அவர்களுக்கு வேலைவாய்ப்புகளையும் நாங்களே ஏற்படுத்தியும் கொடுக்க திட்டங்கள் வகுத்துள்ளோம் என்றார்.

தொழிற்கல்வி திட்டங்களையும் பயிற்றுவிக்கும் செயற்பாடுகளையும் அறிமுகம் செய்யவுள்ளோம். மேலும் தகவல் தொழில்நுட்பத்தில் Off Shore நிறுவன வசதிகளையும் , நாங்கள் அறிமுகம் செய்ய எதிர்பார்த்துள்ளோம் என்று தெரிவித்த அவர், அனைத்து துறைகளிலும் புதிய தொழில்நுட்பத்தை பயன்படுத்தி அதிக வருமானத்தை ஈட்டும் முதலீட்டு திட்டங்களையும் தயாரித்து வருகின்றோம் என்றார்.

அத்தோடு, முதலீட்டாளர்களுக்கான திட்டங்களை இனங்காட்டிக் கொடுப்பதுடன், திட்ட அனுமதி, திட்ட வரைபுகளையும் பெற்றுத் தருவதற்கான ஒழுங்குகளை செய்து வருகிறோம் என்று தெரிவித்த அவர், எனவே, சர்வதேச நாடுகளில் இருக்கும் இலங்கையர்கள் மாத்திரமின்றி சர்வதேச முதலீட்டாளர்களையும் இலங்கையில் முதலீடு செய்யுமாறு நான் அழைப்பு விடுக்கின்றேன் என்றார். .

இலங்கை தற்போது பொருளாதார நெருக்கடியில் இருந்து மீண்டு வரும் இச்சந்தர்ப்பத்தில் சர்வதேச முதலீடுகள் இலங்கை பொருளாதாரத்தை மேலும் பலப்படுத்தும் என்பதே எமது எதிர்பார்ப்பாகும்.


இதற்காக இலங்கையின் அனைத்துத் துறைகளிலும் பாதுகாப்பான, வருவாயை அதிகரிக்கக் கூடிய முதலீட்டு வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுப்போம். இலங்கையின் பொருளாதாரத்தை மீண்டும் பலப்படுத்தி, மக்களின் வாழ்வாதரத்தை மேம்படுத்துவதற்கு சர்வதேச முதலீட்டாளர்கள் கைகொடுக்க வேண்டும். கைகொடுப்பார்கள் என தான் திடமாக நம்புவதாகவும் தெரிவித்தார்.

மும்பை

# ஷாருக் கான்- மனைவியின் குப்பைத் தொட்டியால் பரபரப்பு

பிரபல பொலிவூட் நடிகர் ஷாருக் கானின் மனைவி, 'கௌரி கான்' தயாரித்த குப்பைத் தொட்டியொன்று இணையத்தில் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.








பிரபல கட்டட உட்புற அழகுபடுத்துனராகத் திகழ்ந்து வரும் இவர், கடந்த 2013 ஆம் ஆண்டு முதல், 'கௌரி கான் டிசைன்ஸ்' என்ற பெயரில் ஒரு நிறுவனத்தை நடத்தி வருகின்றார். இந்நிறுவனமானது வீட்டை அழகுபடுத்தும் பொருட்களை விற்பனை செய்து வருகின்றது.

அந்தவகையில் கடந்த சில நாட்களாக குறித்த நிறுவனத்தில் விற்கப்படும் பொருட்களின் விலைகள் இணையத்தில பெரும் பேசு பொருளாகியுள்ளது.

ஏனெனில் குறித்த விற்பனைத் தளத்தில் 'குப்பைத் தொட்டியொன்றின் விலை இந்திய மதிப்பில் சுமார் 15,000 ரூபாய் எனவும், மேசை விளக்கொன்றின் விலை சுமார் 1.5 லட்சம் ரூபாய் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

டெல்லி

## 'ஹோலியின்' போது யுவதிக்கு நேர்ந்த கொடூரம்

டெல்லியில், 'ஹோலிப் பண்டினைக் கொண்டாட்டத்தின் போது, ஜப்பானிய யுவதியிடம் இளைஞர்கள் சிலர் அத்துமீறிய சம்பவம் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



இந்தியா முழுவதும் கடந்த 8 ஆம் திகதி ஹோலிப் பண்டிகை, கோலாகலமாகக் கொண்டாடப்பட்டது. அந்தவகையில் டெல்லியில் இடம்பெற்ற ஹோலிப் பண்டிகைக் கொண்டாட்டத்தின் போது, வீதியில் சென்றுகொண்டிருந்த ஜப்பானைச் சேர்ந்த யுவதி ஒருவரை அப்பகுதியைச் சேர்ந்த இளைஞர்கள் சிலர் முட்டையை உடைத்தும் வர்ணங்களைப் பூசியும், மானபங்கப் படுத்தியுள்ளனர்.

இது குறித்த வீடியோவானது இணையத்தில் வெளியாகி பெரும் அதிர்வலைகளை ஏற்படுத்தியுள்ள நிலையில், சம்பந்தப்பட்ட நபர்கள் மீது உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு மக்கள் கோரிக்கை விடுத்தனர்.

எனினும் இச்சம்பவம் தொடர்பில் குறித்த யுவதி புகார் அளிக்கவில்லை எனக் கூறப்படுகின்றது.

இந்நிலையில் குறித்த வீடியோ காட்சியின் அடிப்படையில் சிறுவன் உட்பட 3 பேரைப் பொலிஸார் கைது செய்து விசாரணை நடத்தி வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

தெலுங்கானா

## "வரதட்சணை போதவில்லை"
### திருமணத்தை நிறுத்திய மணப்பெண் ; கலங்கிய மணமகன்

தெலுங்கானாவைச் சேர்ந்த மணப்பெண் ஒருவர்," மணமகன் குடும்பத்தினர் தனக்குப் போதியளவு வரதட்சணை அளிக்கவில்லை" எனக் கூறி திருமணத்தை நிறுத்திய சம்பவம் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.


தெலுங்கானா மாநிலம், மேட்சல் மல்காஜ்கிரி மாவட்டத்தை சேர்ந்த இளைஞர் ஒருவருக்கு கடந்த 9 ஆம் திகதி திருமணம் நிச்சயிக்கப்பட்டிருந்தது. இதன்போது 2 லட்சம் ரூபாயை மணப்பெண்ணுக்கு, மணமகன் வீட்டார் வரதட்சணையாக வழங்குவதாகத் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் திருமணத்தன்று, மணப்பெண் வெகு நேரமாகியும் மணமேடைக்கு வராததால் அப்பகுதியில் சலசலப்பு ஏற்பட்டுள்ளது. இதனையடுத்து, "மணமகனின் வீட்டார் அளித்த வரதட்சணை தனக்கு போதவில்லை எனக் கூறிய மணமகள், மேலும் இரண்டு லட்சம் ரூபாய் பணம் கொடுத்ததால் அவரைத் திருமணம் செய்துகொள்வதாகத் தெரிவித்துள்ளார். இதனால் ஆத்திரமடைந்த மணமகனின் குடும்பத்தினர் இது குறித்து உடனடியாகப் பொலிஸ் நிலையத்தில் புகார் அளித்தனர். இதனையடுத்து பொலிஸார் இரு தரப்பினரையும் சமாதனம் செய்து வைத்துள்ளனர். எனினும் குறித்த திருமணம் நடைபெறவில்லை எனக் கூறப்படுகின்றது.

அமெரிக்கா

## ட்ரம்ப் ஜனாதிபதியாகலாம் - ஜோ பைடன்

அமெரிக்காவில் 4 ஆண்டுகளுக்கு ஒரு முறை ஜனாதிபதித் தேர்தல் நடைபெற்று வருகின்றது.



அந்தவகையில் வரும் 2024 ஆம் ஆண்டு ஜனாதிபதித் தேர்தலில் ஜனநாயகக் கட்சி சார்பில் தற்போதைய ஜனாதிபதி ஜோ பைடனும், குடியரசு கட்சி சார்பில் முன்னாள் ஜனாதிபதி டொனால்ட் ட்ரம்பும் போட்டியிடவுள்ளனர்.

இந்நிலையில் அண்மையில் பென்சில்வேனியா-வில் பட்ஜெட் திட்டங்கள் குறித்து உரையாற்றிய ஜோ பைடன், தனது முன்னோடியான டொனால்ட் ட்ரம்ப், "ஒருவேளை வருங்கால ஜனாதிபதியாகலாம் " எனக் குறிப்பிட்டிருந்தமை பெரும் பேசுபொருளாகியுள்ளது.

சீனா

## மீண்டும் பொது முடக்கம்? அதிர்ச்சியில் மக்கள்

சீனாவின் 'ஜெஜியாங், ஜின்ஹுவா, ஹாங்சோ, நிங்போ' ஆகிய மாகாணங்களில் வசித்து வரும் மக்களிடையே கடந்த சில வாரங்களாக 'H3N2' என்ற வைரஸ் காய்ச்சல் வேகமாகப் பரவி வருகிறது.

மேலும் குழந்தைகள் மற்றும் சிறுவர்களுக்கு இன்ஃப்ளுயன்ஸா அறிகுறிகள் அதிகமாகக் காணப்பட்டு வருகின்றன.

இந்நிலையில் சீனாவின் பெரும்பாலான நகரங்களில் இக்காய்ச்சல் பரவுவதைத் தடுக்க , ஊரடங்கை அமுல்படுத்தவுள்ளதாகத் தகவல் வெளியாகியுள்ளது.

அந்தவகையில் இதில் 'சியான் மற்றும் ஷாங்சி நகரங்களில் காய்ச்சல் பரவுவதின் தீவிரம் அதிகரித்தால் ஊரடங்கு அமுல்படுத்தப்படும் என்றும், அறிகுறிகள் தென்பட்டால் உடனே தனிமைப்படுத்தி கொள்ள வேண்டும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.


மேலும் ஜின்ஹுவா, ஹாங்சோ மற்றும் பெய்சென் பகுதிகளில் உள்ள பாடசாலைகள் மூடப்பட்டு ஒன்லைன் மூலம் கற்றல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.



சீனா

## சீனாவில் பெய்த புழு மழை: பீதியில் மக்கள்

சீனத் தலைநகர் பெய்ஜிங்கில் கடந்த சில நாட்களுக்கு முன்னர், வானில் இருந்து திடீரென 'புழு மழை' பெய்துள்ளது.



குறிப்பாக பீஜிங்கில் உள்ள வீதிகளில் , நிறுத்தி வைக்கப்பட்டிருந்த வாகனங்களின் மீது திடீரென புழுக்கள் மழையாகப் பொழிந்து நிரம்பி கிடந்த சம்பவம் அப்பகுதி மக்கள் மத்தியில் பெரும் பீதியை ஏற்படுத்தியிருந்தது.

இதற்கான காரணம் என்னவென இதுவரை தெரியாதபோதும், "புழுக்கள் கீழே விழுவது இயல்பானது என்றும்? வசந்த காலத்தின்போது இதுபோன்று ஏற்படும் என்று சிலர் கூறுகின்றனர்.

அதே சமயம் ஒரு சிலர், "அவை புழுக்கள் அல்ல, கம்பளிப்பூச்சிகள்" எனவும் தெரிவித்துள்ளனர்.

இலங்கைக்கெதிரான முதலாவது டெஸ்டில்

# நியூசிலாந்தின் வெற்றிக்கு 257 ஓட்டங்கள் தேவை

இலங்கைக்கு எதிரான முதலாவது டெஸ்டில் நியூசிலாந்து வெற்றி பெறுவதற்கு 9 விக்கெட்டுகள் கைவசமுள்ள நிலையில் 257 ஓட்டங்களை இன்றைய இறுதி நாளில் நியூசிலாந்து பெற வேண்டியுள்ளது.






இரண்டு போட்டிகள் கொண்ட இத்தொடரில், கிறைஸ்ட்சேர்ச்சில் கடந்த வியாழக்கிழமை ஆரம்பமான இப்போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட இலங்கை, குசல் மெண்டிஸின் 87, அணித்தலைவர் திமுத் கருணாரத்னவின் 50, அஞ்சலோ மத்தியூஸின் 47, தனஞ்சய டி சில்வாவின் 46, தினேஷ் சந்திமாலின் 39 ஓட்டங்களோடு சகல விக்கெட்டுகளையும் இழந்து தமது முதலாவது இனிங்ஸில் 355 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், டிம் சௌதி 5, மற் ஹென்றி 4, மிஷெல் பிறேஸ்வெல் ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

பதிலுக்கு தமது முதலாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை, டரைல் மிற்செல்லின் 102, மற் ஹென்றியின் 72, டொம் லேதமின் 67 ஓட்டங்களோடு சகல விக்கெட்டுகளையும் இழந்து 373 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், அசித பெர்ணாண்டோ 4, லஹிரு குமார 3, கசுன் ராஜித 2, பிரபாத் ஜெயசூரிய ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர்.

இந்நிலையில், தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய இலங்கை, மத்தியூஸின் 115, டி சில்வாவின் ஆட்டமிழக்காத 47, சந்திமாலின் 42 ஓட்டங்களோடு சகல விக்கெட்டுகளையும் இழந்து 302 ஓட்டங்களைப் பெற்றது. பந்துவீச்சில், பிளையர் டிக்னர் 4, ஹென்றி 3, சௌதி 2 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

அந்தவகையில் 285 ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடும் நியூசிலாந்து, நேற்றைய நான்காம் நாள் முடிவில் ஒரு விக்கெட் இழப்புக்கு 28 ஓட்டங்களைப் பெற்றுள்ளது. தற்போது களத்தில் லேதம் 11 ஓட்டங்களுடனும், கேன் வில்லியம்ஸன் ஏழு ஓட்டங்களுடனும் ஆட்டமிழக்காமலுள்ளனர். வீழ்த்தப்பட்ட விக்கெட்டை ராஜித கைப்பற்றினார்.



வடக்கின் சமரில் சென். ஜோன்ஸை

## 9 விக்கெட்டுகளால் வீழ்த்திய யாழ். மத்தி

எஸ். நிதர்ஷன்

வடக்கின் சமர் என வர்ணிக்கப்படும் யாழ்ப்பாணம் மத்திய கல்லூரிக்கும், யாழ்ப்பாணம் சென். ஜோன்ஸ் கல்லூரிக்குமிடையிலான 116ஆவது போட்டியை மத்திய கல்லூரி 9 விக்கெட்டுக்களால் வெற்றியீட்டியது.

யாழ்ப்பாணம் மத்திய கல்லூரி மைதானத்தில் கடந்த வெள்ளிக்கிழமை ஆரம்பமான இப்போட்டியின் நாணயச் சுழற்சியில் வெற்றி பெற்ற சென். ஜோன்ஸ், முதலில் களத்தடுப்பைத் தெரிவுசெய்தது.

அதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மத்திய கல்லூரி, தனது முதலாவது இனிங்ஸில் சகல விக்கெட்டுகளையும் இழந்து 279 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில், அஜே 74, விதுஷன் 71, சன்சஜன் 42 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், அபிஷேக் 3 விக்கெட்டுகளையும், கஜகர்ணன், விதுஷன் ஆகியோர் தலா 2 விக்கெட்டுகளையும் வீழ்த்தியிருந்தனர்.

பதிலுக்கு தனது முதலாம் இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய சென். ஜோன்ஸ், சகல விக்கெட்டுகளையும் இழந்து 127 ஓட்டங்களைப் பெற்றது. துடுப்பாட்டத்தில், பென்சர் ஜெசியல் 43, சபேசன் 34 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், நியூட்டன் 4, கஜன் 3 விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

இந்நிலையில், பலோ ஒன் முறையில் மீண்டும் இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடப் பணிக்கப்பட்ட சென். ஜோன்ஸ் சகல விக்கெட்டுகளையும் இழந்து 160 ஓட்டங்களையே பெற்றது. துடுப்பாட்டத்தில், ஜனந்தன் 26, பென்சர் ஜெசியல் 25 ஓட்டங்களைப் பெற்றனர். பந்துவீச்சில், பருதி 4, நியூட்டன் 3, விக்கெட்டுகளைக் கைப்பற்றினர்.

அந்தவகையில் ஒன்பது ஓட்டங்களை வெற்றியிலக்காகக் கொண்டு தமது இரண்டாவது இனிங்ஸில் துடுப்பெடுத்தாடிய யாழ். மத்தி ஒரு விக்கெட்டை மாத்திரமே இழந்த நிலையில் வெற்றியிலக்கையடைந்தது.

தேசிய மட்டத்தில் இரண்டாமிடம் பெற்ற

## மருதமுனை மாணவர்களுக்கு மகத்தான வரவேற்பு

ஏ.எல்.எம். ஷினாஸ்

அகில இலங்கை பாடசாலைகள் கால்பந்தாட்ட சம்மேளனத்தின் அனுசரணையில் நடைபெற்ற 16 வயதுக்குட்பட்ட பாடசாலை மாணவர்களுக்கிடையிலான சமபோச கால்பந்தாட்டத் தொடரில் இரண்டாமிடம் பெற்ற மருதமுனை அல் - மனார் மத்திய கல்லூரி (தேசிய பாடசாலை) அணியினரை வரவேற்கும் நிகழ்வானது, பாடசாலை அதிபர் எம். ஜே. அப்துல் ஹஸீப் தலைமையில் மருதமுனை மண்ணில் அண்மையில் நடைபெற்றது.

பொலன்னறுவை மைத்திரிபால சிறிசேன மைதானத்திலும், றோயல் கல்லூரி மைதானத்திலும் நடைபெற்று முடிந்த இத்தொடரின் இறுதிப் போட்டியில் கண்டி களுகம்மான கெலி ஓயா மகா வித்தியாலயத்திடம் அல் மனார் மத்திய கல்லூரி தோல்வியடைந்திருந்தது. போட்டியின் வழமையான நேரத்தில் போட்டி 0-0 என்ற கோல் கணக்கில் சமநிலையில் முடிவடைந்து 2-3 என்ற ரீதியில் பெனால்டியிலேயே அல்-மனார் மத்திய கல்லூரி தோல்வியடைந்திருந்தது.

அல்-மனார் மத்திய கல்லூரி 112 ஆண்டு கால வரலாற்றில் அகில இலங்கை ரீதியாக கால்பந்தாட்டத் தொடர் ஒன்றில் பெற்றுக் கொள்ளப்பட்ட மாபெரும் உயரிய அடைவாக இது விளங்குகிறது. வெற்றிக்கு உறுதுணையாக செயல்பட்ட பாடசாலையின் அதிபர் எம்.ஜே.அப்துல் ஹஸீப், பிரதி அதிபர்களான எம்.எம். எம். அனஸ், எம்.எம். ஹஸ்மி, திருமதி. றிஸானா லுத்பி ஹுசைன், உதவி அதிபர் எஸ். முபாறக் உட்பட பகுதித் தலைவர்கள், ஆசிரியர் குழாத்தினர், 16 வயதுக்குட்பட்ட கால்பந்தாட்ட அணியினர், பயிற்றுவித்த உடற்கல்வி ஆசிரியர்களான ஏ.எம்.எம். றஜி, ஐ.எம். இர்பான், எம்.ஜே.எம். நிஹால், எம்.ஜே.எம். தில்சாத், விளையாட்டு பயிற்றுவிப்பாளர்களான ஆர். றிஸாப், ஏ.ஜே. துவைஜ் அஹமட், எம்.எச்.எம். நிஷாத் உட்பட வெற்றி வீரர்களுக்கு மாலை அணிவித்து வரவேற்கப்பட்டனர்.



விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிடெட்டினால் திங்கட்கிழமை, 13 மார்ச் 2023, இல. 08, ஹுணுபிட்டி குறுக்கு வீதி, கொழும்பு - 02 இல் வடிவமைக்கப்பட்டு இந்த மின்னிதழ் வெளியிடப்பட்டது.